# வாழ்வின் வழிகாட்டி

ஒரு ஊருக்கு புதிதாக வந்த மனிதனொருவன், அந்த ஊரைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, சுற்றுலா திணைக்களத்தினால் வெளியிடப் பட்ட வரைபடம் கொண்ட வழிகாட்டியொன்றை வாங்கிக் கொண்டான். அது மட்டுமல்லாமல், அந்த ஊரை தனக்கு சுற்றிப் காண்பிப்பதற்காக, அந்த ஊரைப்பற்றி நன்கு அறிந்த வழிகாட்டியொருவனை (Guide) தன் வாகனத்தின் சாரதியாக்கிக் கொண் டான். அதுபோலவே, இந்த உலகி லே வாழ்வதற்கு மனிதர்கள் யாவ ரும், சுகாதாரம், ஆரோக்கியம், வாழ் க்கைதரம், பாடசாலைகள், வேலை கள், உல்லாசப் பயணம் என்று பலவிதமான வழிகாட்டிகளிலே தங்கி வாழ்கின்றார்கள். மனிதர்களால் மனிதர்களுக்கு உருவாக்கப்ப ட்ட அந்த வழிகாட்டிகளால் சில பிரயோனங்கள் உண்டு ஆனால் அவ ற்றை பின்பற்றுகின்றவர்கள் எவரும் மனித வாழ்க்கையின் முதன்மை யான நோக்கத்தை அறிந்து கொள்ளவோ அடைந்து கொள்ளவோ முடியாது. சத்திய வேதமே நம் வாழ்வின் வழிகாட்டியாக இருக்கின்றது. அந்த ஜீவ வார்த்தையை பின்பற்றி நடக்கின்றவர்கள் வாழ்வின் நோக்கத்தையும், அதன் இலக்கையும் அடைந்து கொள்கின்றார்கள். வாழ்வின் வழிகாட்டியாகிய அந்த வார்த்தையானது, மனிதகுலத்தை அழிப்பதற்காக அல்ல, மாறாக நித்தியமான அழிவிலிருந்து அவர்களை காத்துக் கொள்ளும்படியாகவே வெளிப்பட்டது. ஆதிமுதலாய் என்றென்றும் இருந்த அந்த வார்த்தையானது மாம்சமாகி, மனுவுருவாக, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையை கண்டவர்கள், அது பிதாவாகிய தேவனுக்கு, ஒரே பேறானவருடைய மகிமைகக்கு ஏற்ற மகியையாக இருந்தது என்று சாட்சி கொடுத்தார்கள். அவரே மனித குலத்தை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்கும் மெசியாவாகிய இயேசு. வாழ்வின் வழிகாட்டியாகிய அவர் வெளிப்பட்டதை நினைவுகூரும்படி இந்த மாதத்திலே ஒரு நாளை நியமித்திருக்கின்றோம். பிதாவாகிய தேவ னானவர், முன்னுரைத்த இரட்சண்யத்தை நிறைவேற்றி முடித்ததை அறிக்கை செய்வதே அந்த நினைவு கூருதலின் மேன்மையாக இருக்கின்றது. முன்னுரைத்தவைகளை செய்து முடிப்பவர், தான் மறு படியும் வருவேன் என்று உரைத்திருக்கின்றார். எனவே அந்தத் திரு நாளை நம்பிக்கையோடு எதிர்பாத்திருக்கும் நாம், வாழ்வின் வழி காட் டியாகிய ஆண்டவராகிய இயேசு காட்டிய வழியிலே வாழ்வோமாக.

**யோவான் 14:6**

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனு மாயிருக்கிறேன்;

**ஜெபம்:** வாக்குரைத்தவைகளை நிறைவேற்றும் தேவனே, நீர் வாக்கிலே உண்மையுள்ளவர் என்பதை நான் உணர்ந்தவனாய், உம்முடைய வார்த்தையை பற்றிக் கொண்டு வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உத்தம மார்க்கத்தார்

**சங்கீதம் 119:1**

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்

"அன்றிருந்த உலகம் வேறு, இன்றிருக்கும் உலகம் வேறு. இது புது யுகம். நீங்கள் கற்றுக் கொண்டவைகள் இந்த நவீன உலகத்திலே செல்லுபடியாகாது" என்று கூறி அன்றிருந்த பாடங்களின் வழிகாட்டி நூல்களை, நாட்டின் நூல்நிலையத்தின் சரித்திரங்கள்என்ற பகுதியிலே காட்சிப் பொருளைப் போல நேர்த்தியாக அடுக்கி வைத்திருந்தார்கள். இவ்வண்ணமாகவே, நாகரீகம்என்ற போர்வையின் கீழ் வாழும் சில மனிதர்கள், கர்த்தர் விளம்பிய சத்திய வேதத்தையும் குறித்து, தவறாக எண்ணங் கொண்டு, உலக த் தத்துவங்களால் தங்கள் சிந்தைகளை நிரப்பிக்கொண்டு, தங்களுக்குத் தாங்களே கேடுண்டாக்கும்படிக்கு, வாழ்வு தரும் சத்திய வேதத்தை தங்கள் வாழ்க்கையைவிட்டு விலக்கி, மற்றவர்களும் அதை பின்பற்றாதபடிக்கு பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். ஒரு மனிதனானவன், தன் அறிவுக்கு எட்டியபடி, தான் தங்கும் வீட்டை கட்டிக் கொள்ளலாம். தன் விருப்பப்படி சரீத்தை மூட உடைகளை உடுத்திக் கொள்ளலாம். தன் வாய்க்கு ருசியான பிரகாரமுாகவிதவிதமாக சமைத்து உணவுகளை உண்டு கொள்ளலாம். விஞ்ஞானம், தொழில்நுட்பம், செயற்கையான நுண்ணறிவு (Artificail Intelligence)என்று பல துறைகளிலே பாண்டித்தியம் பெறலாம். இப்படியாக புசிப்புக்கு நல்லதும், பார் வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதும் என்றும் தங்கள் நவீனமான வழிகளை தெரிந்து கொள்ளலாம். ஆனால், உலகங்கள் மாறிப்போனாலும், புது யுகங்கள் ஒன்றின்பின் ஒன்றாக பல வர்ணங்களிலே வந்தாலும், மனிதனுக்குள் இருக்கும் ஆத்துமாவை இரட்சிக்க யாரால் கூடும்? எந்த மனித அறிவினாலோ, முயற்சியினாலோ ஆத்தும இரட்சிப்பு உண்டாவதில்லை. மனிதர்களுக்கு செம்மையாக தோன்றுகின்ற வழிகளின் முடிவானது மரணமாகவே இருக்கும். எக்காலமும், எல்லா பருவத்திலும், எந்த சூழ்நிலையிலும், கர்த்தருடைய வார்த்தை மாறிப் போவதில்லை. அதை ஒருவன் தன் வாழ்வில் புறக்கணிக்கலாம், ஆனால் அதை ஒருவனும் மாற்றிப் போடக்கூடாது. அந்த ஜீவ வார்த்தைகள் எந்த யுகத்திலும், அதை சார்ந்து வாழ்பவர்களுக்கு சமாதானமான வாழ்க்கையையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் கொடுக்கின்றது. (யோவான் 6:68) எனவே நாம் எந்த யுகத்திலே வாழ்பவர்களாக இருந்தாலும், அந்த யகத்திற்கு ஒத்து வேஷம் தரியாமல், எப்போதும் கர்த்தருக்கு பயந்து, அவர் வழியிலே நடக்கின்ற உண்மையுள்ள உத்தம மார்க்கத்தாராய் காணப்படுவோமாக.

**ஜெபம்**: காலத்தை கடந்த தேவனாகிய கர்த்தாவே, காலங்கள் மாறினாலும், மனிதர்கள் மாறினாலும், என் வாழ்வில் எல்லாச் சூழ்நிலைகளிலும் நான் உம்முடைய வார்த்தையில் நிலைத்திருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தைதந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்**.**

# குடியிருப்பு

ஆபிரகாம், லோத்து என்னும் இரண்டு உறவினர்கள் ஓரிடத்திலே ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவரின் பொளாதாரம் விருத்தியடைந்து, சொத்துக்கள் பெருகிய போது, வயதில் முதிர்ந்தவனாகிய ஆபிரகாம் லோத்துவை நோக்கி: நாங்கள் இருக்கும் இடமானது, இருவருக்கும் போதாதபடிக்கு எங்கள் சொத்துக்கள் விருத்தியடைந்திருக்கின்றது. எனவே, நீ எந்தப் பக்கமாக போகப் போகின்றாய் என்று தீர்மானம் செய்து கொள். பின்னர் நான் என்னுடையஇடத்தை தெரிந்து கொள்கின்றேன் என்று, கூறினான். இப்படியாக தன் இருப்பிடத்தை தெரிந்து கொள்வதற்கு லோத்து முன்னுரிமையைப் பெற்றுக் கொண்டான். அதன்படிக்கு, தன்னிடமிருக்கும் சொத்துக்களுக்கும், தனக்கும் ஏற்றபடி நீர்வளம் பொருந்திய ஒரு செழிப்பான இடத்தை தெரிந்து கொண்டான். ஆனால், ஆபிரகாமோ, தன்னை அழைத்த தேவனாகிய கர்த்தரை மட்டுமே நம்பியிருந்தான். தன்னை அழைத்த அவருடைய வார்த்தையிலே நிலைத்திருந்தான். ஆண்டுகள் கடந்து சென்றதும், லோத்து தன் குடியிருப்புக்கு என்று தெரிந்த பட்டணமானது, பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருந்ததால், வானத்திலிருந்து வந்த அக்கினியால் முற்றாக அழிக்கப்பட்டது. அவ்விடத்திலே வசித்து வந்த, அவனுடைய இரண்டு குமாரத்திகளுக்கு நியமிக்கப்பட்டிருந்து இரண்டு மருமக்களும் வழி காட்டியாகிய, கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையை குறித்து நகைத்தார்கள். அவனுடைய மனைவி கர்த்தர் கூறிய வார்த்தையை அசட்டை செய்து உப்புத்தூணாக மாறிப்போனாள். லோத்தும் அவனுடைய குமாரத்திகள் இருவரும், ஜனங்கள் இல்லாத மலையிலே வாசம் பண்ணினார்கள். அவனுடைய குமாரத்திகள் அருவருப்பான காரியங்களை நடத்தினார்கள். ஆனால், ஆபிரகாமோ, தன் முதிர் வயதிலும், தன் தேவனா கிய கர்த்தரையே தன் வாழ்வின் வழிகாட்டியாக வைத்திருந்தான். அவருடைய வார்த்தையின்படி தன் வாழ்க்கையை மாற்றிக் கொள்வதற்கு அவன் தாமதிக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தையின்படி தன் குடியிருப்பை தெரிந்து கொண்டான். கர்த்தரே அவனுடைய மகா பெரிய பலனாயிருந்தார். பிரியமானவர்களே, நாம் வசிக்கும் இடத்தை தெரிந்து கொள்வதிலிருந்து நம் வாழ்வில் எல்லா பகுதிகளில் கர்த்தரையே நாம் நம் வாழ்வின் வழிகாட்டியாக கொண்டால், அவரே நம்முடைய அடைக்கலமும், கேடகமும் கோட்டையுமாக இருப்பார்.

**சங்கீதம் 91:1**

**உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.**

**ஜெபம்**: பரலோக ஆசீர்வாதங்களை தரும் தேவனே, நான் இந்த உலகத்தின் செழிப்பைக் கண்டு, அந்த வழியிலே என் வாழ்க்கையை இட்டுச் செல்லாமல், உம் வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆலோசனை தரும் தேவன்

"நான் நீதிமான் எனவே நான் விரும்பிய எந்த இடங்களுக்கு சென்றாலும், நான் என் கர்த்தரிலே நம்பிக்கையாயிருப்பேன் அவர் என்னோடிருப்பார்" என்று ஒரு விசுவாசியானவன், தன்னுடைய விருப்பப்படி தான் வசிக்கும் இடத்தையும், வீட்டையும் தெரிந்து கொண்டான். அந்த விசவாசியானவன் கூறிய வார்த்தைகளில் உண்மை உண்டு. அதாவது, நாம் எங்கு சென்றாலும், வாழ்வின் வழிகாட்டியாகிய நம் தேவனாகியகர்த்தரை சார்ந்து வாழ்வதையே நம் இலக்காக கொண்டிருக்க வேண்டும். ஆனால், நான் விருப்பிய இடத்திற்கு செல்வேன், என்று ஒரு விசுவாசியானவன் கூறுவதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். லோத்து நீதிமானாக இருந்தான். ஆனால், பாவமும் பாலியல் சம்மந்தமான சீர்கேடும், அக்கிரமமும் நிறைந்த இடத்தை தன் வசிக்கும் இடமாகக் கொண்டான். ஆபத்துக் காலத்திலே தேவன் அவனைத் தப்புவித்தார். ஆனால், தன் தெரிந்து கொள்ளுதலினாலே உண்டான பின்விளைவுகளை வாழ்க்கையிலே எதிர்நோக்க வேண்டியிருந்தது. தன் மந்தைகள் பெருக்கத்தினால், தான் இருக்க வேண்டிய செழிப்பான இடத்தை தெரிந்து கொண்ட அவன், முடிவிலே, அவனுக்கு அவனுடைய இரண்டு குமாரத்திகள் மட்டுமே மிகுதியாய் இருந்தார்கள். அவர்கள், வளர்ந்து வந்த இடத்திலே இருந்த பாவமானது அவர்களை பின்தொடர்ந்தது. எனவே, பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்களும் உங்கள் குடும்பமும் வாழ்வதற்கென்று ஒரு இடத்தையும், வீட்டையும் தெரிந்து கொள்ள முன்பதாக, பூமியையும் அதிலுள்ளவைகளையும் படைத்தவரையும், உலகத்தின் வஞ்சகமான தத்துவங்களையும், காலங்களையும், நம்முடைய நாட்களையும் அறிந்த தேவாதி தேவனிடத்திலே ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். வேலை செய்யும் இடம், பிள்ளைகளின் கல்வி, சொந்த பந்தங்கள், நண்பர்கள், போக்குவரத்திற்கான வசதி, தற்போதைய நிர்வாக நிலைமை, நல்ல முதலீடுகள் போன்ற காரணிகளை மட்டும் வைத்து உங்கள் வதிவிடங்களை நிர்ணயிக்காமல், நம்மேல் கண் வைத்து ஆலோசனை தரும் சிறந்த வழிகாட்டியாகிய தேவாதி தேவனை நோக்கி, அவருடைய வழிடநத்துதலுக்காக காத்திருங்கள். நம்முடைய தேவைகளை அறிந்த அவர், ஏற்ற காலங்களிலே அவைகளை வாய்க்கச் செய்வார்.

**சங்கீதம் 32:8**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

**ஜெபம்:** என் மறைவிடமான தேவனே, நான் இருக்க வேண்டிய இடத்தையும், நடக்க்க வேண்டிய வழிகளையும் நீர் எனக்கு காண்பித்து, அந்த வழியிலே நான் நடக்கும்படிக்கு என்னை கரம்பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ சித்தம் நிறைவேற இடங் கொடுங்கள்

“அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமதாக பிரசங்கி, அவர்களுடைய அக்கிரமமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தரு டைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய் தர்ஷீக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடு தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.” (யோனா *1:1-2*) இந்த மனுஷன் கர்த்தரை அறிந்தவன். அவன் போகும் வழியிலே கடலிலே அவனுக்கும் கப்பலிலே அவனோடிருந்தவர்களுக்கும் ஆபத்து நேரிட்டது. கப்பலில் இருந்தவர்கள் நீ யார் என்று கேட்டபோது, யோனா அதற்கு மறுமொழியாக: நான் சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றான். இப்படியாக தேவனாகிய கர்த்தரையே தன் வழிகாட்டியாக கொண்டு, அவரிடத்தில் பயபக்தியுள்ளவனாக இருந்த யோனா, அவருடைய சமுத்தைவிட்டு ஓடிவிடலாம் என்று எண்ணிக் கொண்டான். இன்று கர்த்தருடைய வார்த்தையானது யாவருக்கும் உண்டாகியிருக்கின்றது. வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே, நீங்கள் எல்லாரும் என் அண்டை வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று ஆண்டவராகிய இயேசு அழைப்பை விடுத்திருக்கின்றார். சிலர், அதை கேளாதவர்கள் போல வாழ்ந்து விடுகின்றார்கள். வேறு சிலர், அதைக் கேட்டு, துணிகரமாக அழைப்பை அசட்டை பண்ணி, அதற்கு எதிராக செயற்படுகின்றார்கள். இன்னும் சிலர், தீர்க்கதரிசியாகிய யோனாவைப் போல அவருடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள். ஆனால், சில பருவங்களிலே, சூழ்நிலைகளிலே ஆண்டவராகிய இயேசுவின் சமுகத்தைவிட்டு தப்பிச் செல்லும்படி, பல காரியங்களை நடப்பிக்க முயற்சி செய்கின்றார்கள். அதாவது, தங்கள் கொள்கைகளை தேவனுக்கேற்றவைகளாக மாற்றாமல், தேவனானவர் தங்கள் கொள்கைக்கு உட்பட்டு செயற்பட வேண்டும் என்று தவறான எண்ணங் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். பிரியமானவர்களே, நாம் நம்மை அழைத்தவருடைய சாயலிலே வளர்த்தியடைய வேண்டும். எனவே, தேவனுடைய அருமையான அழைப்பை அசட்டை செய்யாமல் வழிகாட்டும் தேவ வார்த்தைகளுக்கு இடங் கொடுப்போமாக.

**சங்கீதம் 139:7**

**உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கேபோவேன்?உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?**

**ஜெபம்**: அன்பின் தேவனே, உம்முடைய வார்த்தைகள் என் சுய கொள்கைகளுக்குள் உட்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணங் கொள்ளாமல், எல்லா சூழ்நிலையிலும் வார்த்தையின் வழியிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# திருமணங்களை வாய்கச் செய்கின்றவர்

ஆபிரகாம் முதிர்வயதானபோது, தன் ஊழியக்காரனாகிய எலியேசரை அழைத்து, தான் தற்போது குடியிருக்கும் கானானியரின் குமாரத்திகளிட த்தில் நீ என் குமாரனாகிய ஈசாக்கு பெண் கொள்ளாமல், தன் தேசத்தி ற்கு சென்று தன் இனத்தாரிடத்திற்குப் போய், ஈசாக்குக்கு பெண் கொள் ளும்படி வானத்திற்கும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு கேட்டுக் கொண்டான். அதன்படிக்கு அவனுடைய ஊழியக்காரனும் ஆணையிட்டுக் கொடுத்தான். ஆபி ரகாம், தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில்மூத்தவனும், தனக்கு உண் டான எல்லாவற்றிற்கும் அதிகாரி யுமாகிய அந்த ஊழியக் காரனி டம்ஏன் அப்படியாக கேட்டுக் கொ ண்டான்? கானானியர் மத்தியிலே தன் குமாரனுக்கு ஏற்ற அழகான பெண்கள் இல்லை என்பதாலோ? புறஜாதியராகிய அவர்ளிடத்திலே குணசாலியான ஸ்திரிகள் எவரும் இல்லை என்பதாலோ? அல்லது அவ்விடத்திலே உள்ளவர்கள் தன் தரா தரத்திற்கு ஏற்புடையவர்கள் அல்ல என்பதாலோ? இல்லை! அவர்கள் அழிவை நோக்கிச் சென்ற அன்றைய உலகத்தின் பார்வையிலே மிக வும் ஏற்புடையவர்களாக இருந்தார்கள். ஆபிரகாம் தன்னை அழைத்த தேவன் இன்னார் என்பதை அறிந்திருந்ததால், விசுவாசித்திலே நிலை த்திருந்தான். புறஜாதியாராகிய கானானியர், நாகரீகம் உடையவர்க ளும், பலத்தவர்களும், அந்நிய தேவர்களை வழிபடுபவர்களும், பலவி தமான அருவருப்பான பாவங்களுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தவர்க ளுமாக இருந்து வந்தார்கள். ஆனால் ஆபிரகாமோ, "என்னை என் தக ப்பனுடைய வீட்டிலும் என் இனத்தார் இருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்து வந்தவரும், உன் சந்ததிக்கு இந்த தேசத்தைத் தருவேன் என்று எனக்குச் சொல்லி ஆணையிட்டவருமான வானத்துக்குத் தேவ னாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டு வரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனு ப்புவார் என்று தன் வீட்டின் விவகாரங்களிலே கர்த்தரையே நம்பியிரு ந்தான். பிரியமானவர்களே, இன்று சில விசுவாசிகள், தகுந்த பருவத்திலே எப்படி யாவது பிள்ளைக்கு திருமணமாகிவிட்டால் போதும் என்ற மன நிலை யுடையவர்களாக வாழ்கின்றார்கள். ஆனால் தங்கள் உள்ளத் திலே உண்மையாக கர்த்தரை நம்பி காத்திருக்கின்றவர்களுக்கோ கர்த் தர் சகாயராக இருந்து அவர்கள் காரியங்களை வாய்க்கச் செய்வார்.

**ஆதியாகமம் 24:7**

**அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்.**

**ஜெபம்**: குறித்த காலத்திலே காரியங்களை வாய்க்கச் செய்யும் தேவனே, இந்த உலகத்தின் போக்கிலே சரியானவற்றை செய்யத் துணியாமல், உம்முடைய வார்த்தையை நம்பி உமக்கு காத்திருக்கின்றவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காரியம் எப்படிக் கைகூடும்?

ஆபிரகாமின் ஊழியக்காரனாகிய எலியேசர், தன் எஜமானனுக்கு தான் வாக்குக் கொடுத்தபடி, தன் எஜமானனாகிய ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு பெண்கொள்ளும்படிக்கு கானானாரியருடைய தேசத்திலிருந்து புறப்பட்டு மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊரில் சேர்ந்து, ஊருக்கு புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே நின்று: "என் எஜமானனாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானனாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். காரியமானது எப்படி நிச்சயப்படுத்தப்பட வேண்டும் என்பதை தன் எஜமானனாகிய ஆபிரகாமின் தேவனாகியகர்த்தரிடதிலே அறிக்கை செய்துகொண்டான். கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று அறியும் பொருட்டு மவுனமாயிருந்தான். கர்த்தரோ அவனுடைய எஜமானனுக் கும், அவனுக்கும், அனுக்கிரகம் செய்தார். இடமறியாத, இனமறியாத எலியேசருக்கு கர்த்தர் துணையாக நின்று, அவன் செய்ய காரியத்தை வாய்க்கச் செய்தார். அருமையான விசுவாசிகளே, ஒருவேளை ஆபிர காம், கர்த்தரை அறியாத அந்நிய நுகத்தலே ஒரு குணசாலியான பெண் ணை தன் குமாரனுக்கு மனைவியானகக் கொண்டு, பின்பு அவளை மாற்றி விட லாம் என்று எண்ணியிருந்தால் தவறாகுமோ? ஊரிலே இத்தனை பெண்கள் இருக்க, தன் எஜமானன் உணர்வில்லாமல், அறியாத தூர தேசத்திற்கு போகச் சொல்கின்றாரே என்று எலியேசர் கூறியிருக்கலாம். இன்று பல விசவாசிகள் மத்தியிலே, திருமண சம்பந்தமான காரியங்களிலே இப்படியான கேள்விகளும், நியாயங்களும் வெளிப்படுகின்றது. விலைமதிக்க முடியாத தன்னுடைய தூய இரத்ததினாலே தங்களை இரட்சித்த தேவனை மறுதலித்து, இந்த உலகத்தின் போக்கிலே சென்று, தேவனாகிய கர்த்தர் தங்கள் சந்ததிக்கு வைத்திருக்கும் அருமையான திட்டங்களை குலைத்துப் போடும்படி உலகத்திற்கு ஏற்ற, கல்வி, அந்தஸ்து, தராதரம், வேலை, ஆஸ்திகள் என்று பற்பல பொருத்தங்களை பார்க்கின்றார்கள். இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற கர்த்தர் மனிதனுடைய நினைவுகளை அறிந்திருக்கின்றார். நீங்களோ வழிகாட்டியாகிய கர்த்தருக்கு காத்திருங்கள். தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவராகவேயிருக்கின்றார்.

**புலம்பல் 3:25**

**தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்.**

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, ஏன் இருதயம் விரும்பியபடியும், என் கண்களின் பார்வைக்கு ஏற்றபடியும் நான் என் வாழ்வின் காரியங்க ளை ஏற்படுத்திக் கொள்ளாமல், உம்முடைய நேரத்திற்கு காத்திருக்கும் படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வழிகாட்டும் வார்த்தைகள் எதற்கு?

அநேக ஆண்டுகளாக சபையிலே இருந்து வந்த விசுவாசியானவனின் மகனானவன், அந்த ஊரிலுள்ள பெண்ணொருத்தியை தான் திருமணம் செய்யப் போவதாக தீர்மானம் செய்து கொண்டான். அதை அறிந்த சபையின் மேய்ப்பரானவர், அந்த வாலிபனானவன், அந்நிய நுகத்திலே பிணைக்கப்பட்டு, தன் வாழ்விலே வேண்டப்படாத விளைவுகளை உண்டு பண்ணப் போகின்றான் என்று மிகவும் கரிசனை கொண்டார். அதனால், அவர் அந்த வாலிபனானவனுடைய தகப்பனாரை சந்தித்துப் பேசும்படியாக சென்றிருந்தார். மேய்ப்பரானவரைக் கண்ட தகப்பனானவர், அந்தமேய்ப்பரானவர் தன்னுடைய மகனாகவனுடைய வாழ்க்கையைக் குறித்த கரிசணையோடு வந்திருக்கின்றார் என்பதை மறந்து, தன் மகனானவனின் செய்கையை நியாயப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, மேய்ப்பரானவரை நோக்கி: கர்த்தர் மோவாப்பிய ஸ்திரியாகிய ரூத் என்பவளுக்கு இரட்சிப்பை கொடுத்தார். அவள் வழியாக இரட்சணியத்தை உண்டாக்கவில்லையா. அப்படியே, அந்நிய நுகத்திலிருக்கும் இந்தப் பெண்ணும் இரட்சிப்படைவாள் என்று கூறிக் கொண்டார். அந்த மேய்ப்பரானவர், வாழ்வில் ஏற்படும் சூழ்நிலையையும், சூழ்நிலைகளிலிருந்து தப்பித்தக் கொள்ளும் போக்கை உண்டுபண்ணும் வழிகாட்டும் தேவ வார்த்தையை கேட்பதற்கு முன்னதாகவே, சந்தர்ப்பத்திற்கு தப்பித்துக் கொள்ளும்படி தன் இருதயத்தை கடினப்படுத்தியிருக்கும் அந்த தகப்பனானவரின் நிலையை கண்டு பரிதாப்பட்டார். கர்த்தரிடத்திலே உண்மையாக இருங்கள், அவர் உங்களுக்கு இரக்கம் செய்வார் என்று அந்த தகப்பனானவரிடம் கூறினார். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட அருமையான விசுவாசிகளே, வாழ்வின் வழிகாட்டியாகிய தேவனுடைய வார்த்தையானது, மனதில் தோன்றும் இச்சைகளை நியாயப்படுத்துவதற்கல்ல, மாறாக நித்திய ஜீவனுக்கென்று அருளப்பட்டிருக்கின்றது. அவைகளின் உண்மையான விளக்கங்களை அறியாமல், நாம் நம்முடைய தவறான வழிகளை நியாயப்படுத்துவதற்கு துணிகரம் கொள்வதற்கு நல்லதல்ல. அறிந்தோ அறியாமலோ, நம் வாழ்விலே பலதரப்பட்ட சூழ்நிலைகள் உண்டாகலாம். அந்த நேரங்களிலே, சத்தியத்தின் வழி நடந்திடும் நீதிமானானவன், மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும், தேவனுடைய ஆலோசனையை கேட்கும் போது, இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன், கண்ணிகளுக்கு தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டு பண்ணுவார். எனவே, குற்றங்களை மறைக்காமல், அறிக்கை செய்யுங்கள்.

**சங்கீதம் 103:8**

**கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, வாழ்வின் விளக்காக இருக்கும் உம்முடைய ஜீவ வார்த்தைகளை என் துர்க்குணத்திற்கு மூடலாக பயன்படுத்தாமல், மனத்தாழ்மையோடு உம்மிடத்தில் சேரும் உணர்வுள்ள இருயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எந்தக் காலத்திலும் எந்த வேளையிலும்

“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்கீதம் 119:105)”. இந்த வேத வார்த்தையை வாசிக்கும் போது, உங்கள் மனதிலே தோன்றும் எண்ணங்கள் என்ன? இரவு நேரத்திலே, தெருவிலே மின்விளக்குகள் இல்லாத இடத்திலே நான் ஒற்றையடி பாதை வழியாக செல்லும் போது, அங்குள்ள பாம்புகள், வனவிலங்குகள் என்னை தீண்டாதபடிக்கு கர்த்தருடைய வசனம் எனக்கு வெளிச்சமாக இருக்கும் என்பது பொருளாகுமா? வேலையிடங்களிலே, கடைத் தெருக்களிலே கர்த்தர் என்னை வழிநடத்துவார் அல்லது சத்துரு எனக்கு தீங்கு செய்யும் போது, அவர் என்னை காத்துக் கொள்வார் என்பதாகுமா? சில விசுவாசிகள்,இப்படியாக தேவனுடைய வசனங்களை தங்கள் வாழ்வின் ஒரு சில பகுதிகளுக்கு மட்டுப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். இருள் சூழ்ந்திருக்கும் இந்த வனாந்திர வழியாகிய இந்த உலகத்தை நாம் கடந்து கொண்டிருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் இந்தப் பூமியிலே பிறந்த நாள் முதல், கடைசி மூச்சுவரைக்கும் பல காலங்களையும், பருவங்களையும், நேரங்களையும் கடந்து செல்கின்றோம். பற்பல எதிர் பாராத சூழ்நிலைகளை எதிர்நோக்குகின்றோம். மலைபோன்ற பிரச்சனைகள், மரண இருளின் பள்ளத்தாக்குகளை கடக்குமாப்போலான அனுபவங்கள் வாழ்விலே உண்டாகின்றது. அந்த வழியலே, பாதையிலே நாம் இடறாமல் நடந்து ஒவ்வொரு சூழ்நிலைகளையும் ஜெயிப்பதற்கு கர்த்தருடைய வசனமே நம் வாழ்வின் வழிகாட்டியாக இருக்கின்றது. ஒரு பெற்றோர் குழந்தையை பெற்று வளர்க்கின்றார்கள். அந்த குழந்தையானது பல பருவங்களை கடந்து வாலிப பிரயாயத்தை அடைகின்றது. வாலிப பிராயத்திலுள்ள பிள்ளைகளை கொண்ட பெற்றோருக்கும், அந்த வாலிப பிராயதிலுள்ள பிள்ளைகளுக்கும் வழிநடத்துதல் தேவை. வாலிப பிரயாயத்திலுள்ள பிள்ளை திருமணம் செய்துகொள்வதற்கு ஆலோசனைகளும், வழிநடத்துதலும் தேவை. இப்படியாக வாழ்க்கை வட்டத்தின் எல்லாப் பருவங்களிலும் கர்த்தருடைய வார்த்தையானது நம்முடைய வாழ்வின் பாதையின் வெளிச்சமாக இருக்கின்றது. கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். வேதத்தின்படி நடப்பதெப்படி என்று வேதமே நமக்கு கருத்துடன் கற்றுக் கொடுக்கின்றது. அந்த வெளிச்சதிலே நடந்து, அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி, விசுவாசியின் நடைகள் ஸ்திரப்பட்டால் அது அவனுக்கு நலமாயிருக்கும்.

**சங்கீதம் 119:6**

**நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும்போது, வெட்கப்பட்டுப் போவதில்லை**

**ஜெபம்**: என் வாழ்வின் வழிகாட்டியாகிய தேவனாகிய கர்த்தாவே, எக்காலத்திலும் உம்மைய நம்பி, உம்முடைய வார்த்தையின் வழியிலே நான் நடக்க எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 6:24 –29

# வாழ்விலே முக்கியமானது எது?

திருமண வயதை அடைந்த ஆண்கள் தங்கள் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று மனதிலே ஒரு பட்டியலைப் போட்டு வைக்கின்றார்கள். அதுபோலவே, பெண்களும், தங்கள் வருங்கால கணவர் இப்படியாக இருக்க வேண்டும் என்று பல காரியங்களை தங்கள் மனதிலே வைத்துக் கொள்வார்கள். திருமண வயதையடைந்த பிள்ளைகளையுடைய பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு இப்படியான சம்மந்தம் வர வேண்டும் என்ற தங்கள் பட்டியலை வைத்துக் கொள்வார்கள். இவை கள் சாதாரமாண விசுவாசிகள், அவிசுவாசிகள் யாவரும் செய்து வருகின்றார்கள். இவைகளிலே வெளித்தோற்றம், ஏற்ற குடும்பம், ஆஸ்தி, கல்வி, அந்தஸ்து என்பவைகள் பொதுவாக காணப் படும் சில அம்சங்களாக இருக்கும். அதாவது, ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், அவர்களுடைய பெற்றோராக இருந்தாலும், தாங்கள் விரும்பும்படி நடக்கின்றவர்கள், தாங்கள் விரும்பும் காரியங்களை செய்கின்றவர்களையே அதிகமாக விரும்பவார்கள். உலகத்தின் ஒரு பகுதியிலே வாழ்பவர்கள் பொருத்தங்களை பார்க்கும்படி நட்சத்திரங்களை நாடுகின்றார்கள். உலகத்திலே மறுமுனையிலே வாழ்கின்றவர்கள், தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொண்டாலும் பொருத்தங்களை பார்க்கும்படிக்கு இல்லற வாழ்க்கையையும் ஒத்திகை பார்கின்றார்கள். அவர்கள் பார்க்கும் பொருத்தத்தின் தார்ப்பரியம் என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள். எதற்காக பொருத்தத்தை பார்க்கின்றார்கள்? பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தங்கள் குடும்ப வாழ்விலே நிறைவேற்றும்படியாகவா? அல்லது இந்த உலகத்தின் போக்கினால் வரையறுக்கப்பட்டு, அவிசுவாசிகளினால் அங்கீகரிக்கப்பட்ட குடும்ப வாழ்க்கையை வாழும்படிக்காகவா? விசுவாச மார்க்கத்தார் மத்தியிலும், உலகபோக்குக்குரிய அம்சங்களையே முதன்மைப்படுத்தும் காலமாக இருப்பதை நாம் காண்கின்றோம். பிரியமானவர்களே, தேவன் இருதங்களை ஆராய்ந்தறிகின்றார். திருமண ஒப்பந்தங்களிலே நீங்கள் எதை மனதார முக்கியதுவப்படுத்தி வருகின்றீர்கள் என்பதை நீங்களே உங்கள் வாழ்விற்கு வழிகாட்டும் தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்துபாருங்கள். முதல் உலக பொருத்தம், பின்பு தேவ பொருத்தம் என்று வாழாமல், தேவனுயை ராஜ்யத்தையே முதன்மைப் படுத்தி வாழுங்கள்.

**மத்தேயு 6:33**

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

**ஜெபம்**: வாழ்விற்கு நல்ல ஆலோசனை தரும் தேவனே, நான் என்னுடைய குடும்ப வாழ்விலே, எப்போதும் மேலானவைகளை தேடுவதையே முதன்படுத்தும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – ரோமர் 12:1 – 2

# முடிவுபரியந்தம் நிலைநிற்பவைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவனின் உடலிலே சுக வீனம் ஏற்பட்டபோது, அவன் தான் வைத்தியரிடம் செல்வதில்லை, மருந்தெடு ப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டதால், அவன் தன் வீட்டின் பின்பு றத்திலே இருந்த மூலிகை செடியின் சில இலைகளை கொய்து, அரை த்து சம்பலாக்கி, உணவோடு உட்கொண்டான். சில நாட்களிலே அவன் சுகமடைந்தான். அவன் அயலிலே வாழ்ந்த தேவ பக்தியுள்ள இன்னுமொரு மனிதனனான வன், அந்த விசுவாசியைப் போல சுகவீன முற்றபோது, ஊரிலுள்ள மருத்துவரிடம் சென்று சில மாத்திரைகளை பெற்றுக் கொண்டான். தேவ பக்தியுள்ள மனிதனானவன் வீடு திரும்பும் போது, அயலிலே வாழ்ந்த மனிதனொருவன், அவனை நோக்கி: நீ மருத்துவரிடம் சென்றாயா? உனக்கு தேவனிடத்தில் விசு வாசம் இல்லையா என்று அவனை கடிந்து கொண்டான். அதற்கு அந்த மனிதனானவன்: சகோதரனே, நீ வீட்டின் பின்புறத்திலுள்ள மூலிகைச் செடியின் இலைகளை அரைத்து அதன் சாரை உட்கொண்டு சுகமடை ந்தாய். நான் பார்கச் சென்ற மருத்துவர், அதே மூலிகைகளை அரைத்து, மாத்திரையாக்கி வைத்திருந்தார். அவர் அதை எனக்கு கொடுத்தார். மூலிகை செடியின் இலைகளை உண்டால் விசுவாசம், ஆனால் மூலி கையின் இலைகளை மாத்திரையாக்கி உண்டால் அவிசுவாசமா என்று கேட்டான். அதற்கு அந்த விசுவாசியானவன் பதில் கூறமுடியாமல் வாய டைத்துப் போனான். நித்திய ஜீவனுக்கென்று அழைப்பட்ட அருமையான சகோதரசகோதரிகளே, தேவனாகிய கர்த்தரால் கூடாத காரியம் ஒன்று மில்லை. இந்த பூமியிலேயுள்ளதும், மனிதனால் உருவாக்கப்பட்டவை களும் பூரணமானவைகளோ, நிரந்தரமானவைகளோ அல்ல. சிலர் மாத் திரைகளை தவிர்த்துக் கொள்வதற்காக இயற்கை மூலிகைகளை மரு ந்தாக எடுத்துக் கொள்கின்றார்கள். சிலர், இயற்கையிலிருந்து உரு வாக் கப்பட்ட மருந்து மாத்திரைகளை உட்கொள்கின்றார்கள். எல்லா மருந் துகளும், மாத்திரைகளும், மூலிகைகளும், அவைகளை உட்கொண்ட எமது உடலும் அழிந்து போகும். இந்த உலகிலே நாம் வாழும் நாட்கள் குறு கியது, எனவே, பிரயோஜனமற்ற வாக்குவாதங்களுக்கும், கருத்தற்ற தர் க்கங்களிலேயும் உங்கள் நேரத்தை விரயமாக்காமல், சோர்ந்து போகா மல் அழியாமையை நாடித் தேடுங்கள். உங்கள் புறம்பான மனுஷனுக்கு ரியவைகளை பற்றிக்கொள்ளாமல், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவதற்குரியவைகளையே மேன்மைப் படுத்துங்கள்.

**2 கொரிந்தியர் 4:18**

**ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்ப டாதவைகளோ நித்தியமானவை கள்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உல கிலே வாழும் நாட்களிலே, நான் உம்முடைய வழி நடத்துதலின்படி வாழ் ந்து மேன்மையானவைகளை நாடித் தேட உணர்வுள்ள இருதயத்தை தந்த ருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வியாழன் \| டிசம்பர் 12 | 📖 மாலை வாசகம் - ஏசாயா 38:1 – 9 |
|---|---|

# விசுவாசி மரித்தாலும் பிழைப்பான்

சில விசுவாசிகள் தங்கள் சரீரங்களிலே நோய்கள் ஏற்படும் போது வைத்தியரிடம் சென்று மருத்துவ ஆலோசனைகளையும், நோய்ளுக்கான மருந்துகளையும் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் சுகமும் ஆரோக்கிய மும்கர்த்தரிடத்திலிருந்து,அவருடைய நேரத்திலே உண்டாகின்றது. ஏனெனில் மருந்து எடுப்பவர்கள் எல்லாரும் சுகத்தை கண்டடைவதில்லை.வேறு சில விசுவாசிகள், எப்படிப்பட்ட நோய்கள் சரீரத்திலே ஏற்பட்டாலும், வைத்தியரிடம் செல்வதில்லை, மருந்துகள் ஏதும் எடுப்பதில்லை. மாறாக சுகம் தேவனால் வரும் என்று தரித்திருக்கின்றார்கள். அது அவர்களுடைய சொந்த தீர்மானம். ஆனால் சுகமும் ஆரோக்கியமும் கர்த்தரிடத்திலிருந்து, அவருடைய நேரத்திலே உண்டாகின்றது. ஏனெனில் மருந்து எடுக்காதவர்கள் எல்லாரும் சுகத்தை கண்டடைவதில்லை. எலியாவின் இரட்டிப்பான வல்லமையைப் பெற்ற விசுவாசவீரனாகிய எலிசா என்னும் தீர்ககதரிசியானவர், அவருடைய காலம் நிறைவேறிய போது, மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான். கருப்பொருளாவது, ஒருவன் விசுவாசியாக இருந்தாலும், அவவிசுவாசியாக இருந்தாலும், ஒருநாள் மரிக்க வேண்டும். விசுவாசத்திலே நிலைத்திருந்து சுகம் பெற்ற அநேக முன்னோடிகளை வேதத்திலும், கடந்த காலங்களிலும், நாம் வாழும் இக்காலத்திலும் கேள்விப்பட்டிருக்கி ன்றோம். அது போலவே, இப்படியாக மருந்துகளை எடுக்காமல், அற்புத அடையாளங்களோடு சுகம் பெற்றவர்கள், உலக ஆசைகளால் இழுப்புண்டு, விசுவாசத்தைவிட்டு விலகி, பின்மாற்றமான வாழ்க்கைக்கு திரும்பியிருப்பதையும் நாம் காண்கின்றோம். கருப்பொருளாவது, மருந்துகளை எடுப்பவர்களானாலும், மருந்துகளை எடுக்காதவர்களானாலும், தங்கள்வாழ்கையிலேவரும்எல்லா போராட்டங்களின் மத்தியிலும், ஆண்டவராகிய இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்திலே நிலைத்திருப்பானாகில் அவன் ஆத்துமாக மரித்துப் போவதில்லை. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவ னெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்பதை நாம் விசுவாசித்து, நம்முடைய நித்திய வழிகாட்டியும் மெசியாவுமாகிய ஆண்டவர் இயேசு இந்த உலகத்திற்கு வந்த பிரதானமானதும் அவசியமானதுமான அநாதி நோக்கம் நம்மில் நிறைவேறும்படிக்கு, ஆத்தும மீட்புக்குரியவைகளை பற்றிக் கொண்டிருப்போமாக.

**யோவான் 11:25**

**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்**

**ஜெபம்**: என்னை நித்திய ஜீவனுக்கென்று அழைத்த தேவனே, உம்முடைய முதலாம் வருகையின் நோக்கத்தை நான் உணர்ந்து அதை என் வாழ்வில் நிறைவேற்ற பிரகாசமுள்ள மனக்கண்களை எனக்கு தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதைக்குறித்து மேன்மைபாரட்டுவேன்?

“நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே” இந்த வார்த்தையானது நம்முடைய சரீரத்திற்கு மட்டுமல்ல, நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திற்குரியதாகும். இந்த வார்த்தையானது தனிப்பட பாவங்களுக்கும், சாபங்களுக்கும் உரியதுமட்டுமல்ல, நம்முடைய சரீரத்திலே வரும் வியாதிகளுக்கும், நம்முடைய முழுவாழ்விற்குரியதாகும். எனவே, நம்முடைய விசுவாச வாழ்விலே நாம் எதைக்குறித்து மேன்மைபாராட்ட முடியும்? நான் வியாதிகளுக்கு மருந்தெடுக்காமல் இருக்கின்றேன் என்பதையா? அல்லது தேவனானவர் இந்த பூமியிலே உண்டுபண்ணின வைத்தியர்களைக் குறித்தா? தன் விசுவாசத்திலே அகங்காரம் கொள்கின்றவன், தன் விசுவாசித்திலே மற்றவனை குற்றம் சாட்டுகின்றவன், இன்னும் தேவனுடைய கிருபையை அறியவேண்டிய பிரகாரமாக அறியாதிருக்கின்றான். நாம் தேவ கிருபையிலே பலப்படும்படிக்கு, அவருடைய சமுகத்திலே நாம் நம்மை தாழ்த்துகின்றவர்களாக இருக்க வேண்டும். ஒரு விசுவாசியானவன், விசுவாசத்திலே உறுதியாக இருக்கின்றேன் என்று அறிக்கை செய்யும் போது, அந்த விசுவாசமானது தேவனுடைய சமுகத்திலே அவருக்கு பிரியமுள்ளதாக இருந்தால், அந்த இடத்திலே விசுவாசத்தைக் குறித்த மேன்மைபாராட்டுதல்லல்ல, மாறாக, தேவ கிருபையைக் குறித்த மேன்மைபாராட்டுதலே இருக்கும். ஆண்டவராகிய இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களிலே இருந்த மதத்தலைவர்கள் தங்கள் விசுவாசத்தை குறித்து அதிகதிகமாக மேன்மைபாராட்டினார்கள். அதனிமித்தம் அகங்காரம் கொண்டு, எவரைக் குறித்த விசுவாசம் அவர்களுக்கு இருக்க வேண்டுமோ, அவரைப் புறக்கணித்து, சிலுவையிலே அறைந்தார்கள். எனவே அழியாத ராஜ்ய த்திற்கென்று அழைப்பை பெற்ற அருமையான விசுவாசிகளே, இன்று நீங்கள் எதைக் குறித்து மேன்மைபாராட்டுவீர்கள்? விசுவாசத்தை தொடக்கின்றவரும் முடிக்கின்றவருமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக கிருபையும் சத்தியமும் உண்டாயின. அவரே நம்முடைய வாழ்வின் வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கின்றார். அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றுள்ளோம். எனவே, மருந்தைக் குறித்தும், மாத்திரையைக்குறித்தும் தர்க்கிப்பதை நிறுதித்து விட்டு, நான் நிர்மூலமாகாதிருக்கி ன்றது கர்த்தருடைய கிருபையே என்று தேவ கிருபையைக் குறித்தே மேன்மைபாராட்டுங்கள்.

**புலம்பல் 3:22**

**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.**

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிக்கின்ற தேவனே, நான் ஒருபோதும் பெருமையான உள்ளம் கொண்டிராமல், மனத்தாழ்மையோடு உம்மை பற்றிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அற்புதங்களை செய்யும் தேவன்

ஒருகிராமத்திலே வாழ்ந்து வந்த தாயானவள், மரணத்திற்கேதுவான கடும் வியாதியுற்றிருந்ததால். அவளுடைய வீட்டின் வழியாக சென்ற இரண்டு ஊழியர்கள், அவளுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து, அவளுடைய வியாதிக்காக ஜெபம் பண்ணினார்கள். ஆண்டவராகிய இயேசுதாமே அந்த தாயானவளுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த நாளிலிருந்து அந்தத் தாயானவள், தன் வாழ்வை முற்றிலும் தேவனிடம் ஒப்புக் கொடுத்து, தான் இனி மருந்தெடுப்பதில்லை என்று பிரதிஷ்டை செய்து கொண்டாள். அது அந்தத் தாயானவளுடைய விசுவாசம். அதை அவள் தன் பிள்ளைகளிடத்தில் திணிக்காமல், பிள்ளைகளுக்கு நோய்கள் வரும்போது, அவர்களை ஊர் மருத்துவரிடம் அழைத்து சென்று அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை பெற்றுக் கொள்வாள். அதைக் குறித்து சிலர் அவளை வினாவியபோது, அவர்களுக்கு மறுமொழியாக, பிள்ளைகள் வளர்ந்து தங்கள் அறிவுக்கு வரும் போது, தங்கள் வாழ்விலே தேவனுக்குரியவைகளை தங்கள் மனதார செய்து கொள்வார்கள் என்று தயவாக கூறினாள். அந்த தாயானவளுடைய வாழ்விலே மருந்தெடுக்காமல் வாழ்வது என்ற தீர்மானம் மட்டுமல்ல, தேவனுக்கு பிரியமாக வாழ வேண்டும் என்பதிலே உறுதியாக இருந்தாள். தன்னை குணமாக்கிய தேவ கிருபையை மேன்மைபாராட்டி வந்தாள் அதனிமித்தம், ஆத்துமா நோயினால் சரீரம் பாதிக்கப்படாதபடிக்கு, அவள் தனக் கெதிராக தீமை செய்தவர்களை மன்னித்து, அவர்களுக்காக ஜெபம் செய்து வந்தாள். பெருந்திண்டியினாலும், லௌகீக கவலையினாலும் தன் இருதயத்தை பாராமாக்காபடிக்கு, போதுமென்கின்ற மனதுடன், தன் குடும்ப வருவாய்க்கு ஏற்றபடி, ஆரோக்கியமுள்ள உணவு வகைகளை சாப்பிட்டு வந்தாள். குணசாலியான ஸ்திரியைப் போல இரட்டோடே எழுந்து தன் வீட்டிற்காக பிரயாசப்பட்டு சுறுசுறுப்பான இருந்து வந்தாள். எனவே, அவள் சரீரத்திலே இக்காலத்திற்குரிய நோய்கள் ஏற்படாமல் இருந்தது. பிரியமானவர்களே, அந்தத் தாயானவளுடைய வாழ்க்கையிலே அவள் தேவன் பேரில் கொண்ட விசுவாசத்தினால் உண்டான கனிகள் வெளிப்பட்டன. பிதாவாகிய தேவனுடைய நாமம் அவள் வழியாக மகிமைப்பட்டது. அவ்வண்ணமாகவே நம்முடைய விசுவாசமானது, நம்முடைய வாழ்விலே தேவனுக்கு பிரியமானவைகளை நடப்பிக்கும்படி வழி காட்டும் வேத வார்த்தைகளுக்கு இடங் கொடுப்போமாக.

**யாக்கோபு 5:15**

அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்;

**ஜெபம்**: வார்த்தையை அனுப்பி குணமாக்கும் தேவனே, நீர் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை நான் அறிக்கையிடுகின்றேன். உமக்கு பிரியமான விசுவாச வாழ்க்கை வாழும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அதிசயங்கள் செய்யும் தேவன்

ஒரு ஊரிலே, யுத்த நாட்களிலே மாலை வேளைகளிலே ஊரடங்கி, போக்கும் வரத்தும் இல்லாமல் எல்லாரும் தங்கள் வீட்டிற்குள்ளே இருந்து வந்தார்கள். ஊழியர்களோ, உத்தியோகத்தர்களோ எந்த அலுவலுக்கும் தங்கள் வீட்டுக் கதவை திறக்காத பயங்கரமான காலமாக இருந்தது. அந்த ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனுக்கு மரணத்திற்கேதுவாக காய்ச்சல் உண்டாயிருந்தது. அவனுடைய குடும்பத்தார் முக்கிய அலுவலாக வெளியூருக்கு சென்றிருந்ததால், மத்தியான வேளையிலே அவனுடைய நண்பனொருவன் அவனை தூரத்திள்ள வைத்தியரிடம் அழைத்து சென்றான். அவர் மேலோட்டமாக பரிசோதனை செய்துவிட்டு, சில மாத்திரைகளை கொடுத்தனுப்பினார். அன்று இராத்திரியலே அவனுடைய உடல் மிகவும் பெலவீனமுற்று கடுமையான வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த இடத்திலிருந்தவர்கள் ஜெபம் செய்தார்கள். அவனுடைய நண்பனானவன், அந்த ஊரிலே வாழ்ந்து வந்த அனுபமிக்க சிரேஷ்ட வைத்தியரின் வீட்டுக்குச் சென்ற அவ ருடைய கதவை தட்டினான். ஆனால், வைத்தியருடைய வீட்டிலிருந்த எவருமே கதவை திறக்க துணியவில்லை. அந்த அயலிலே வாழ்ந்த விசுவாசக் குடும்பமொன்றை சேர்ந்தவளும், வைத்திய சாலையிலே தாதியாக வேலை பார்த்து வந்த சகோதரியொருவர், அந்த வாலிபனு டைய வீட்டி ற்கு சென்று காய்ச்சலை தணிக்கும்படிக்கு தனக்கு தெரிந்த வைத்தியங்களை செய்தாள். பின்பு, தன் செல்வாக்கை பயன்படுத்தி, அதே சிரேஷ்ட வைத்தியரிடம் சென்று, தன் குரலைக் காண்பித்து, வைத்தியரோடு பேசி, அவருடைய கதவை திறக்க வைத்து, அவரை அழைத்து வந்து, அந்த வாலிபனுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டாள். அந்த வைத்தியரும் அந்த இராத்திரியிலே அவ்விடத்திற்கு வந்து, அந்த வாலிபனுக்கு வைத்தியம் செய்தார். தேவனாகிய கர்த்தர், அந்த சகோதரியை அந்த வாலிபனுடைய வீட்டிற்கு அனுப்பி, மனித தயவை ஏற்படுத்தி, அந்த வாலிபனுக்கு கிருபை செய்தார். பிரியமானவர்களே, நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய வழிகள் அதிசயமானவைகள். மரண பயங்கரங்கள் சூழ்ந்திருந்த அந்த இருளான காலத்திலே, தேவனாகிய கர்த்தர் தம்முடைய பிள்ளைக்கு நன்மை செய்யும்படி சாத்தியமற்ற காரியத்தை, அறியாத இடத்திலிருந்து நடப்பித்து முடித்தார். எனவே நன்மைகள் செய்யும் அவரையே பற்றிக் கொண்டிருங்கள். அவருடைய வழிநடத்து தலுக்கு இடங் கொடுங்கள்.

**யோபு 9:10**

ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.

**ஜெபம்:** ஆராய்ந்து முடியாத அதிசயங்களை செய்யும் தேவனே, நீர் ஏற்படுத்துகின்ற வழிகளுக்கு முரணாக நான் எண்ணங்கொள்ளாதபடிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் நாடித் தேடுபவைகள்

இன்றையிலே உலகிலே வாழ்க்கையின் பெரும்பகுதியை மனிதர்கள் கற்றுக் கொள்ளவதிலே செலவிடுகின்றார்கள். தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்று, பெற்றோர்கள், அயராது உழைக்கின்றார்கள், சில வேளைகளிலே தங்கள் பெலனிற்கும் நிர்வாகத்திற்கும் அப்பாற்பட்ட சிறந்த பாடசாலைகளிலே தங்கள் பிள் ளைகளை சேர்த்துக் கொள்கின்றார்கள்.காரணம் என்ன? அவர்கள் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காகவா? அல்லது இந்த உலகிலே, படித்து பட்டம் பெற்று, சமுகத்திலே கௌரவத்துடன் வசதியாக வாழ வேண்டும் என்பதற்காகவா? இந்த உலகத்தினால் உண்டான படிப்புக்களினாலும் பட்டங்களினாலும் ஒருவனும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியாது. ஊர், உலகறியாத குக்கிராமங்களிலே வசிக்கும் கல்வறிவற்ற ஏழைகள் விசுவாசத்திலே உறுதியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். பிள்ளைகளின் நலன் கருத்தி, பெற்றோர் அயராது வேலை செய்கின்றார்கள். சில விசு வாசிகள் சபை ஆராதனைகளுக்கும் சமூகமளிக்காமல், தங்கள் வேலைகளை முக்கியத்துவப்படுத்துகின்றார்கள். எதற்காக இதை நாடித் தேடுகின்றார்கள்? “ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள்நாடித்தேடுகிறார்கள்இவைகளெல்லாம்உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுதுஇவைகளெல்லாம்உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.” என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். மனிதர்களை மட்டுமல்ல, உயிரினங்கள் யாவையும் கூட நம்முடைய பரமபிதா பிழைப்பூட்டுகின்றார். எனவே, நீங்கள் தேவ பயமற்ற அஞ்ஞானிகளைப் போல, அவர்கள் வழியிலே நடக்காமலும், அவர்கள் பெருமைபாராட்டும் காரியங்களை பற்றிக் கொள்ளாமலும், வாழ்வின் வழிகாட்டியாகிய வேதத்தின் வெளிச்சத்திலே நடவுங்கள். அவ்வழியிலே நடக்கின்றவர்கள் இடறிப்போவதில்லை. அவர்கள் வாழ்விலே சமாதானம் தங்கும். அந்த வார்த்தையிலே நித்திய ஜீவன் உண்டு.

**மத்தேயு 6:26**

**அவைகளையும் உங்கள் பரம பிதாபிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?**

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, நான் என் வாழ்வின் மேன்மையான நோக்கத்தை உணர்ந்து, உம்முடைய வழிகாட்டும் வார்த்தையின்படி மேலானவைகளை நாடித் தேடும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# போஷக்கின்றவர் யார்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த சிறு பையனொருவன் தன் தயாருடன், ஆலயத்திற்கு சென்று ஞாயிறு ஓய்வுநாள் பாடசாலையிலே மிகவும் வாஞ்சையுடன் கலந்து கொண்டான். அவனுடைய தந்தையார் தேவ பக்தியில்லாதவராக இருந்த போதும், ஆலயத்திற்கு சென்றால், பிள்ளைகள் நல் வழியிலே நடத்தப்படுவார்கள் என்பதினால், தன் மகனானவனை தடை செய்யாதிருந்தான். ஒரு நாள் இரவு ஆகாரத்திகாக குடும்பமாக ஆயத்தப்பட்ட போது, சிறு பையனானவன், ஆகாரத்தை கொடுத்த தேவனாகிய கர்த்தருக்கு நன்றி செலுத்தி ஜெபம் செய்தான். அதை கேட்டஅவனுடைய தந்தையார், நான் எவ்வளவாக கஷ்டப்பட்டு வேலை செய்து மேசையிலே ஆகாரத்தை போடுகின்றேன், நீ எப்படி தேவனுக்கு நன்றி சொல்வாய் என்று கேட்டுக் கொண்டார். இந்த உலகத்தை படைத்த தேவனே உங்களுக்க வேலையை கொடுத்த்திருக்கின்றார் என்று அந்த சிறுபையனானவன் தன் தந்தையாருக்கு பதிலளித்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது. தேவனானவர் மனிதர்களுக்கு கொடுத்த சுயாதீனத்தை அவர்கள் துஷ்பிரயோகம் செய்து, தங்களுக்கென்று சில வழிகளை ஏற்படுதிக் கொண்டு, தேவனையும், அவரை விசுவாசிக்கின்றவர்களையும் பரியாசம் செய்கின்றார்கள். தேவனானவர் அதை அறிந்திருந்தும், அவர்கள் அறியாமையின் நிமித்தம் அவர்களை தண்டிக்காமல், ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையவேண்டும் என்ற நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." (மத்தேயு 6:45). விதைப்பும் அறுப்பும் என்ற மாறாத பிரமாணத்தின்படி, தன்னை அசட்டை செய்கின்றவர்களும், உணவு உண்ணத்தக்கதாவும், உடுக்கத்தக்கதாவும், உறங்கத் தங்கதாவும் தம்முடைய இரகத்ததை காண்பிக்கின்றார். நித்திய ஜீவனைக் குறித்து அறியாமல் இருளடைந்திருக்கும் இருதயத்திற்கு, பரம பிதா பிழைப்பூட்டுகின்றார் என்ற உணர்வு எப்படி ஏற்படும்? எல்லா ஜீவன்களின் கண்களும் அவரை நோக்கிக் கொண்டிருக்கிறது. ஏற்ற வேளையிலே அவர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கின்றார்." ஒருவேளை உங்களுக்கு வேலையற்றறுப் போனாலும், கர்த்தர் போஷிக்கின்றவராக இருக்கின்றார்.

**சங்கீதம் 147:9**

**அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிறார்.**

**ஜெபம்**: எங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்கும் தேவனே, உயர்விலும், தாழ்விலும் நான் வழி காட்டும் உம் வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என் தேவைகளை சந்திப்பவர்

நாங்கள் பாடுபட்டு உழைக்கின்றோம்! இது எங்கள் கையின் பிரயாசம்! என்று தங்கள் சுயபெலத்தைக் குறித்து தேவனை அறியாத அவிசுவாசிகள், தங்கள் அறியாமையிலே தங்களைத் தாங்களே மேன்மை பாராட்டிக் கொள்கின்றார்கள் என்பதைக் குறித்து கடந்த நாளிலே பார்த்தோம். உழைப்பதும், பிரயாசப்படுவதும் அவசியம் ஆனால், நல்லோர் மேலும், தீயோர் மேலும் தமது சூரியனை உதிகப்பண்ணி, பொழியப் பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யச் பண்ணுகிறார் (மத்தேயு 5:45) என்று அறிந்த சில விசுவாசிகள்கூட, பாதி வழியிலே இந்த உண்மையை மறந்து போய்விடுகின்றார்கள். பறவைகள், மிருகங்கள், ஜீவனுள்ளவைகள் யாவும்ஆகாரத்திற்காக படைத்தவரை நோக்கி பார்கின்றன.ஏற்ற வேளையிலே அவைகளை அவர் போஷிக்கின்றார். ஆனால், சில தேவ பிள்ளைகளோ, கல்வி, கடும் உழைப்பு, சமூக அந்தஸ்துக்கள் மற்றும் தொடர்புகள் (Network) என்று அவைகளை தங்கள் வாழ்விலே மேன் மைப் படுத்துவதால், தேவன் பேரில் விசுவாசமாக இருப்பவர்களை காணும் போது, அது அவர்களுக்கு அற்பமாக தோன்றிவிடுகின்றது. தேவனை அறிந்திருக்கின்றோம் என்று தங்கள் சுயபெலத்திலே தங்கி வாழ்பவர்கள்தங்கள் எஜமானன் யார் என்பதை மறந்து போனவர் களாக இருக்கின்றார்கள். “மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண் டவனின் முன்னயையும் அறியும், தம்முடைய ஜனங்கள் அறிவில்லாம லும், உணர்வில்லாமலும் இருக்கின்றது” என்று தேவனாகிய கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி வழியாக உரைத்திருக்கின்றார். ஆரம்பத்திலே நன்றாக ஓடிய இவர்கள், பாதி வழியிலே, அறிந்தோ அறியாமலோ தங்கள் சுய பெலத்தை மேன்மைப் படுத்த ஆரம்பித்துவிடுகின்றார்கள். இவர்கள் தேவன் மேலே விசுவாசமுள்ளவர்களாக இருந்தபோது, உபவாசங்கள், ஜெப கூட்டங்கள், வேதப்படிப்புக்ள், ஐக்கியங்கள் யாவும் அவசியமானதாகும் மேன்மையாதாகவும் இருந்தது. பின்பு, உலக தொடர்புகள் இவர்கள் வாழ்விலே செல்வாக்கு செலுத்தும்போது, முன்பு மேன்மையாக தோன்றின யாவும் இவர்களுக்கு அநாவசியமாக தோன்றிவிடுகின்றது. இது அவர்கள் வாழ்விலே வேதனைகளுக்கு ஆரம்பமாய் இருக்கும். எனவே, நீங்களோ எப்பொழுதும் வாழ்வின் வழிகாட்டியாகிய கர்த்தரையே சார்ந்து வாழுங்கள்.

**பிலிப்பியர் 4:19**

**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, என் வாழ்வின் ஆதரம் நீர்தான் என்ற உண்மையைவிட்டு நான் ஒருபோதும் விலகி, இந்த உலகத்தின் போக்கில் என் வாழ்வை அழித்து விடாதபடிக்கு, உம்மைப் பற்றிக்கொண்டு வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வறட்சிக் காலங்களில் போஷிக்கின்றவர்

> **1 இராஜாக்கள் 17:5**
> **கர்த்தருடைய வார்த்தையின் படியே யோர்தானுக்கு நேரா யிருக்கிற கேரீத் ஆற்றண்டை யிலே தங்கியிருந்தான்.**

தீர்க்கதரிசியாகிய எலியாவின் நாட்களிலே, வறட்சியும் பஞ்சமும் முன் னறிவிக்கப்பட்ட போது, கர்த்தர் எலியாவை கேரீத் என்னும் ஆற்றண் டையிலே இருக்கும்படியும், நீ அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய் என்றும், அங்கே உன்னைப் போஷிக்க காகங்களுக்குக் கட்டளையிடு வேன் என்றும் கூறினார். காகங் கள் மனிதர்களுக்கு ஆகாரம் கொண்டு வருவதென்பது, ஒரு சாத்தியமான செயல் அல்ல. அப் படியிருந்தும் எலியாவோ, கர்த்த ருடைய வார்த்தையின்படி அவர் குறித்த ஆற்றங்கரையிலே தங்கி யிருந்தான். கர்த்தர் குறித்த பிர காரமாக, காகங்கள் அவனுக்கு காலையிலும், மாலையிலும் அப்பமும் இறைச்சியும், கொண்டு வந்தது. கர்த்தர் கூறிய பிரகாரமாக அவன் தன் தாகத்தைத் தீர்க்க அந்த ஆற்றின் தண்ணீரைத் குடித்தான். கிறிஸ்து வுக்குள் அருமையான சகோதர சகோதரிகளே, ஒருவேளை நீங்கள் வறட்சியினால் ஏற்படும் பஞ்சமான நாட்களை உங்கள் வாழ்நாட்களிலே சந்திக்காதிருக்கலாம். உங்களில் சிலர் யுத்த நாட்களினால் ஏற்படும் பஞ்சத்தை அனுபவித்திருக்கலாம். அத்தகைய நாட்களிலே, சில மனி தர்களிடம் பணம் தாராளமாக இருந்திருக்கலாம். ஆனால், அந்தப் பண மானது யாரையும் போஷிக்க கூடாததாயிருந்தது. விற்கவும், கொள்ள வும் முடியாத காலங்கள் ஏற்பட்டிருந்தது. சிலர் முகாம்களிலே தங்கள் காலங்களை கழித்தார்கள். ஆனாலும், வாழ்வின் வழிகாட்டியாகிய கர்த் தரோ, வழிகளை திறந்து போஷித்தார், அற்புதங்களை நடப்பித்தார் என்ற சாட்சியை நாம் கேட்டிருக்கின்றோம். அன்று எகிப்திலிருந்து கானா னுக்கு, வனாந்திர வழியாக நடத்திச் செல்லப்பட்ட தம்முடைய ஜனங்க ளுக்கு மன்னாவை பொழிந்து அவர்களை தறவாமல் போஷித்தார். தம் மண்டை வந்து, தம்முடைய போதனையை கேட்டுக் கொண்டிருந்த ஆயி ரக் கணக்கான ஜனங்களை போஷிக்கும்படி ஐந்து அப்பங்களையும் இர ண்டு மீன்களையும் பலுகிப் பெருகச் செய்தார். கர்த்தருடைய வழிகள் அதிசயமானவைகள். சமுத்திரத்திலே வழியையும் வலிய தண்ணீர்க ளிலே பாதையையும் உண்டு பண்ணுகின்றவர். அவருடைய வார்த் தையை விசுவாசித்து, அதைப் பின்பற்றுகின்றவர்கள் ஒருபோதும் வெட் கப்பட்டுப் போவதில்லை. அன்று எலியாவை போஷித்த தேவன் இன்று நம்மோடு இருக்கின்றார். எனவே, அதிசய வழிகளை உண்டுபண்ணுகி ன்ற ஆண்டவராகிய இயேசுவை பற்றிக் கொண்டு முன்னேறிச் செல் லுங்கள்.

> **ஜெபம்:** அதிசயமான வழியிலே என்னை நடத்திச் செல்லும் தேவனே, காலங்கள் உம்முடைய கரத்திலே உண்டு. அவை மாறிப்போனாலும், மாறாதவராகிய உம்மைப் பற்றிக் கொண்டு, உறுதியாய் தரித்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தீர்க்கதரிசியும் ஏழை விதவையும்

தேசத்திலே மழை பெய்யாதபடியினாலே, எலியா வாழ்ந்த வந்த இடத்திலிருந்து கேரீத் ஆற்றின் தண்ணீர் வற்றிப் போயிற்று. அந்த வேளையிலே கர்த்தர் எலியாவை நோக்கி: நீ எழுந்து, சாறிபாத் ஊருக்கு போய், அங்கே தங்கியிரு, உன்னை பராமரிக்கும்படி அங்கே இருக்கின்ற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார். அந்த விதவையின் பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அந்த கடைசி ஆகாரத்தை, அவளும் அவன் குமாரனும் சாப்பிட்டு பின்னர் பஞ்சத்தினால் செத்துப்போவதற்கு அவள் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். எனினும், அவன் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலியாவின் வார்த்தையின்படி, தன்னிடமிருந்து கொஞ்சத்திலே, முதலாவதாக தீர்க்கதரிசிக்கு அடையை செய்து கொடுத்தாள். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோகவில்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. பிரியமான சகோதர சகோதரிகளே, நீதிமான அப்பத்துண்டுக்கு இரங்குவதில்லை. “சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது” என்றும் “நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன் ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்துதிரிகிறதையும் நான் காணவில்லை.” தாவீது ராஜா பாடியிருக்கின்றதை பரிசுத்த வேதாகமத்தின் சங்கீதப் புத்தகத்திலே வாசிக்கலாம். ஐசுவரியம் பெருத்தவர்கள் தங்கள் ஐசுவரியத்தில் நம்பியிருக்கின்றார்கள். இந்த உலகத்தினால் உண்டான அந்த ஐசுவரியம் இந்த உலகத்தைப் போல அழிந்து போய்விடும். ஆனால், வானத்தையும், பூமியையும், அதிலுள்ள யாவையும் படைத்த, நேற்றும் இன்றும் மாறாத கர்த்தரை நம்பியிருக்கின்றவனா பாக்கிவானாக இருக்கின்றான். அவர் அவனுடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கின்றார். தன்னுடைய பிள்ளைகள் நீதியின் வழியிலே பிழைப்பதற்கு கற்றுக் கொடுகின்றார். ஆனால், மிகையான மழையினாலும், அதிக வறட்சியினாலும் அவர்கள் பிரயாசங்கள் பலனற்றுப் போகும் வேளைகளிலும், ஆபத்துக் காலங்களிலும் அவர் தம்முடையவர்களை அதிசயமான வழிகளிலே போஷிக்கின்றவராயி ருக்கின்றார்.

**சங்கீதம் 121:2**

**வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்துஎனக்கு ஒத்தாசை வரும்.**

**ஜெபம்**: உன்மேல் என் கண்கள் வைத்து ஆலோசனை தருவேன் என்று சொன்ன தேவனே, என் உயர்விலும், தாழ்விலும், ஆபத்துக் காலங்களிலும் உம்மையே நம்பியிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தூதர்களை அனுப்பி போஷிப்பார்

**1 இராஜாக்கள் 19:5**

அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான்.

எலியா என்னும் தீர்க்கதரிசி நம்மைப் போல ஒரு பாடுள்ள மனுஷாக இருந்தான். ஒரு சமயம் தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து, அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், இளைத் துப்போய் தன் வாழ்க்கையைக் குறித்து சலித்துப் போனவனாக ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான் அப்பொ ழுது ஒரு தூதன் அவனைத் தட்டி யெழுப்பி: எழுந்திருந்து போஜ னம் பண்ணு என்றான். அவன் விழித்துப் பார்க்கிறபோது, இதோ, தழலில் சுட ப்பட்ட அடையும், ஒரு பாத்திரத் தில் தண்ணீரும் அவன் தலை மாட் டில் இருந்தது் அப்பொழுது அவன், புசித்துக் குடித்துத் திரும்பப் படுத் துக்கொண்டான். கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழு ந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற் பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந் துபோனான். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்மை அழைத்த தேவ னாகிய கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் எலியாவை போஷித்த வழிகளை ஆராய்ந்து பாருங்கள். தேசத்திலே பஞ்சம் ஏற்ப ட்டிருந்த போது, அவர் முதலிலே காகத்தை அனுப்பினார். பின்னர் ஒரு விதவையினால் போஷிக்கப்படும்படி ஆயத்தப்படுத்தியிருந்தார். பின் னர், தம்முடைய தூதனை அனுப்பி, அவன் பெலப்படும்பாடியாக ஆகா ரத்தை அவனுக்கு உண்ணக் கொடுத்தார். வேதத்திலே காணும் தேவ மனுஷனாகிய பவுல் என்பவர், நற்செய்தி பணிக்காக சென்று சில இடங்களிலே தரித்து நிற்கும் போது, அங்கே வேலை செய்தார். அந்த வருவாயினால் அவர் போஷிக்கப்பட்டார். அவர் சிறையிலே கடுங்கா வலிலே இருக்க வேண்டிய சந்தர்பங்கள் உண்டாயிருந்து. அந்த வேளை யிலே கர்த்தர் அவரை போஷிக்க வழிகளை உண்டு பண்ணியிருந்தார். இப்படியாக நம்முடைய தேவன் நம்மை போஷிக்க அறிந்திருக்கின்றார். எனவே, உங்கள் கல்வியிலும், வேலை அனுபவங்களிலும், சமூக தொட ர்புகளிலும், முன்னோர் விட்டுச் சென்ற ஆஸ்திகளையும் நம்பியிருக் காமல், வழியாகட்டியாகிய கர்த்தரிலே நம்பிக்கையாயிருங்கள். அவர் அன்றன்றுள்ள அப்பத்தை நம்முடைய சரீரத்திற்கு மாத்திரமல்ல, நம்மு டைய ஆத்துமாவிற்கு வேண்டிய ஆகாரத்தை கொடுத்து ஆத்துமாவை திருப்தியாக்குகின்றவராயிருக்கின்றார்.

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே, நீரே என்னைப் போ ஷிக்கின்றவர். அன்றன்றைக்கான அப்பத்தை எனக்கு தந்து என்னைத் திரு ப்பதியாக்கி நடத்துகின்ற உம்முடைய கிருபைக்காக ஸ்தோத்தரிக்கின் றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | டிசம்பர் 22 | 📖 மாலை வாசகம் – நீதிமொழிகள் 3:5 – 6

# நம் இலக்கு இம்மைக்குரியதல்ல

அநியாயங்கள் மலிந்து கொண்டிக்கும் இந்த உலகிலே நீதி நியாயமான வழியிலே வாழும்படிக்கும், இருள் சூழந்திருக்கும் ஸ்தலத்தை பிரகாசிக்கும்படிக்கும் பிதாவாகிய தேவன் தாமே நம்மை ஏற்படுத்தியிருக்கின்றார். கிறிஸ்துவுக்குள்ளே உன்னதங்களிலே சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினாலே நம்மை ஆசீர்வதித்திருக்கின்றார். இந்த அழைப்பின் நோக்கம் என்ன? அவருடைய தெரிந்து கொள்ளுதலின் தார்ப்பரியம் என்ன? இந்த உலகிலே பிறந்து, சௌகரியமாக வாழ்ந்து, கல்வியை கற்று, கைநிறைய உழைத்து, நல்ல திருமணத்தை செய்து, நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கையை வாழும்படிக்காகவா? ஒருவனுடைய வாழ்விலே இவை யாவும் சீரும் சிறப்புமாக இருந்தால், அவன் தேவனாலே ஆசீர்வதிக்கப்பட்டவன் என்றும், அவனை கிறிஸ்தவன் என்று கூறவிடமுடியுமா? அவன் நித்திய ஜீவனை அடைந்து விடுவான் என்று உறுதி செய்ய முடியுமா? ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் தேவைகள் என்னவென்று பரம பிதா அறிந்திருக்கின்றார். ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும்அது அவனுக்கு ஜீவனாகாது. அவிசுவாசிகளாகவே வாழும் பலர், தங்கள் சரீரங்களை ஆரோக்கியத்துடன் பேணி பாது காக்கின்றார்கள். அநேக ஆண்டுகள் கணவன் மனைவியாக உயிர் வாழ்கின்றார்கள். விதைப்பும் அறுப்பும் என்ற மாறாத பிரமாணத்தின்படி அவர்கள் தங்கள் பிரயாசத்தின் பலனை கண்டு கொள்கின்றார்கள். ஆனால், தேவ கிருபையானது வெளிப்பட்ட பிரதானமான நோக்கத்தை நாம் மறந்து விடக்கூடாது. நித்திய ஜீவனுக்கென்று மேலாக அழைப்பை பெற்றிருக்கின்றோம். பரம தேசத்தின் யாத்திரிகர்களாக இந்த உலகத்ததை கடந்து கொண்டிருக்கும் நாம், நித்தியமானதை பெற்றுக் கொள்ளும்படி நித்தியராகிய ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய அக்கிரமத்திலேயே அழிந்து போகாதபடிக்கு, மூடப்பட்ட பரலோகத்தின் வாசலை திறந்து, செல்ல வேண்டிய பாதையை காட்டும்படிக்கு அவர் வழிகாட்டியாக இந்தப் பூமிக்கு வந்தார். எனவே, வீடு, பாடசாலை, வேலை, திருமணம், ஆரோக்கியம், உல்லாசப் பயணம் என்று உங்கள் நோக்கத்தை அவைகளிலேயே பதித்துவிடாமல், நித்திய வாழ்வின் வழிகாட்டியாகிய இயேசுவையே பின்பற்றுங்கள்.

**1 கொரிந்தியர் 15:19**

**இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.**

**ஜெபம்:** நித்தியமான பரம தேசத்திலே நீடுழியாக வாழ என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தின் சுகபோகங்களிலே நான் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, அழைப்பின் நோக்கத்தை பற்றிக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிலையான நகரத்தை நோக்கி....

தன்நிறைவு பொருளாதாரத்தை தேசங்கள் நாடிச் செல்கின்றது. சில தேசங்கள் அதை அடைந்து கொண்டதும், தங்கள் சாதனைகளிலே பெருமிதம் அடைகின்றார்கள். நாமும் பொருளாதாரத்தை அடிப்ப டையாக வைத்து, அவ்வண்ணமாக தன்நிறைவை இந்தப் பூமியிலே நாடித் தேடுவோமாக இருந்தால், நம்முடைய இருதயம் பூமியோடு ஒட்டிக் கொண்டிருக்கும். ஆசீர் வாதம் என்னும் பதத்தை பேசும் போது, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்வதையே பெரிதான பாக்கியம்என்பதை உணர்ந்து கொள் ளும் சிந்தையை தரித்தவர்களாக இருங்கள். கிறிஸ்துவின் நல்ல போர் ச்சேவகன், உண்மையும் உத்தமமு முள்ள ஊழியன், நல்ல உக்கிராணக்காரன், நல்ல ஸ்தானதிபதி, விசு வாசமுள்ள சீஷன் என்ற பதங்களை மனதிலே எப்போதும் பதிய வைத்திருங்கள். ஒருநாள் நாம் கிறிஸ்து இயேசுவின் சந்நிதானத்திலே நிற்கும் போது இந்த வார்த்தைகளால் அவர் நம்மை அழைக்கும்படிக்கு, உயிர் வாழும் நாட்களிலே, கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தன்நிறைவு பொருளாதாரம் அல்ல. மாறாக, எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்குள் மனரம்யமாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தின் போக்கை எதிர்த்து, வழிகாட்டி யாகிய கிறிஸ்துவின் வழியிலே நடக்கும் போது, போராட்டங்களும், எதிர்ப்புக்களும், சவால்களும் தவிர்க்க முடியாதவைகள். அதே வேளை யிலே உலகத்தை ஜெயங் கொண்டவர் நம்மோடிருக்கின்றார். நமக்கு ள்ளே வாசம் செய்கின்றார். சுத்த மனசாட்சியிலே ஒலிக்கும் மெல்லிய சத்தத்தை கேட்டு, அந்த வார்த்தையின் வழியிலே நடவுங்கள். நம்மு டைய வாழ்வின் நோக்கம் இந்த பூமிக்குரியதல்ல, மாறாக பரலோ கத்திற்குரியது. நாம் தற்போது வாழும் இடம் தற்காலிகமானது, நாம் சென்றடையும் பரம தேசமோ நிரந்தரமானது.எனவே இந்த உலகிலே குறைவுகளை சந்திக்க நேர்ந்தாலும், அவை நமக்கு முன் வைக்கப்ப ட்டிருக்கும் கனமகிமைக்கு நிகரானது அல்ல. ஆகையால் நீங்கள் இளை ப்புடையவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த, நம் வாழ்வில் வந்த வழிகாட்டியாகிய ஆண்டவராகிய இயேசு வையே நினைத்துக் கொள்ளுங்கள். அவர் காட்டிச் சென்ற வழியையே பின்பற்றுங்கள்.

**எபிரெயர் 13:14**

**நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, இந்த உலகிலே தன்நிறைவை நாடி ஓடி வாழ்வின் நிம்மதியை கெடுத்துப் போடாமல், நித்தியமானவைகளை பற்றிக் கொள்ளும்படி, ஒரு நல்ல போர்ச்சேவகனாய் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கேற்ற கிரியைகள்

அக்காலத்திலே வனாந்திரத்தின் வழியாக சென்று கொண்டிருந்த ஜன ங்கள் வானத்திலிருந்து பொழிந்த மன்னாவை புசித்தார்கள். ஆண்ட வராகிய இயேசுவின் போதனையை கேட்டுக் கொண்டிருந்த ஜனங்கள் பலுகிப் பெருகின அப்பங்களை புசித்தார்கள். அந்த உணவால் அவ ர்கள் சரீரத்தில் ஏற்பட்ட பசி அடங்கியது. ஆனால் அவர்கள் ஆத்துமா வோ இளைப்பாறுதலை காண வில்லை. அவர்கள் மாம்ச இச் சைகள் நிறைந்தவர்களாய் இரு ந்தார்கள். வனாந்தரத்திலே மன் னாவை உண்டவர்கள், தங்களை வழிநட த்திச் சென்ற மோசேக்கு எதிராக கலகம் பண்ணினார்கள். ஆண் டவர் இயேசுவின் போதனையை கேட்டும், உணர்வடையாமல் இருந்த வர்கள் அப்பம் உண்ட பின்பு, ஆண்டவர் இயேசுவுக்கு எதிராக கலகம் பண்ணினார்கள் (யோவான் 6:26). அவர்கள் அதனால் தங்கள் வயிற்றுப் பசியை ஆற்றினார்களே தவிர ஆன்மீக விடுதலையை பெற் றுக் கொள்ளவில்லை. இன்றைய நாட்களிலும், ஆண்டவராகிய இயே சுவே நம் வயிறாற உண் ணும்படி நம்மைப் போஷிக்கின்றார். அதை ஏன் என்று உணராமல், வயிராறும்படி உண்ணும் ஆகாரத்தையே நாடித் தேடுவோமாக இருந்தால், வனாந்திரத்தில் இருந்தவர்கள் போலவும், வறிறாறும்படி ஆண்டவர் இயேசுவை பின்பற்றிய ஜனங்களைப் போல வும், நாமும் ஆண்டவரா கிய இயேசுவின் வார்த்தைகளால் உண்டாகும் ஆன்மீக விடுத லையை அற்பமாக எண்ணிவிடுவோம். “ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந் தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்தி லிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம் இந்த அப்பத் தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப் பான் நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடு க்கும் என் மாம்சமே என்று மீட்பராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே “அழிந்துபோகிற போஜ னத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜன த்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்”. அருமையான சகோதர சகோதரிகளே, கல்வி, வேலை, அந்தஸ்து, ஆஸ்தி என்று அழிவுக்குரியவை களிலே தங்கி வாழாமலும், அவைகளையே உங்கள் வாழ்விலே நாடித் தேடாமலும், நித்திய வாழ்விற்கு வழிகாட்ட இந்தப் பூமிக்கு வந்த ஆண்டவர் இயேசுவை விசுவாசியுங்கள். அவரை விசுவாசித்தால், அவர் கூறிய வழியிலே நடவுங்கள். அவர் நம்முடைய தேவைகள் என்ன வென்று அறிந்திருக்கின்றார்.

**யோவான் 6:29**

அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

**ஜெபம்**: இரட்சண்யத்தை இந்த உலகிற்கு அனுப்பி ஜீவனுள்ள பிதாவே, இந்த உலகிலுள்ள வழிகாட்டிகளை அல்ல, நீர் அனுப்பிய வழிகாட்டியா கிய உம்முடைய திருக் குமாரனின் வழியிலே என்னை நடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | டிசம்பர் 25 | 📖 மாலை வாசகம் – லூக்கா 2:9–11

# வழிகாட்டியாகிய விடிவெள்ளி நட்சத்திரம்

சொன்னதை செய்து முடிக்கும் பிதாவாகிய தேவன் தாமே, தம் உண்மையில் பிசகாதவர். அவர் வாக்கு மாறாதவர். மனித குலம் பாவத்திலே மாய்ந்து அழிந்து போகாதபடிக்கு, உங்களுக்கு ஒரு இரட்சகரை அனுப்புவேன் என்று வாக்குரைத்தார். காலங்கள் நிறைவேறிய போது, அவர் முன்னுரைத்தபடியே, தேவ குமாரானாகிய இயேசு இந்த பூவுலகிலே மனிதனாக உதித்தார். வாக்குரைக்கப்பட்ட மெசியாவாகிய இயேசு தாமே, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடித்தார். ஆண்டவராகிய இயேசுவின் முதலாம் வருகையின் முன்னறிவிப்பு நிறைவேறின நாளை நாம் இன்று நினைவு கூருகின்றோம். பலர் இந்த நாளை பலவிதமாக கொண்டாடுகின்றார்கள். சிலர், இந்த நாளை வியாபாரமயமாக்கி தங்களுக்கு ஆதாயம் உண்டாக்கும் வழிகளை நாடித் தேடுகின்றார்கள். வேறுசிலர், உலக களியாட்டுகளையும், தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றும்படிக்கும் புதிய வழிகளை நாடித் தேடுகின்றார்கள். இன்னும், சிலர் இந்த நாளை கொண்டாடாமல் இருப்பதற்கு நியாயங்களை நாடித் தேடுகின்றார்கள். ஆனால், நாமோ, முன்குறித்தபடி முதலாம் வருகையை நிறைவேற்றியவர், முன்னுரைத்தபடியே இரண்டாம் தடவை வருவார் என்பதை விசுவாசித்து அறிக்கை செய்கின்றோம். "இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. நான் அல்பாவும் ஓமெ காவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைக ளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப் பார்கள். சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக் கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாகவுமிருக்கிறேன் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்." பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாகும், வாழ்வின் வழிகாட்டியுமாக இருக்கும் அவரையே பின்பற்றுங்கள். அவருடைய வருகை நாளை எதிர்பார்த்து முன்னேறுங்கள்.

**வெளிப்படுத்தல் 22:16**

**நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.**

**ஜெபம்:** அன்பின் பிதாவாகிய தேவனே, நான் மாயைக்குள் அழிந்து மாண்டு போகாமல், நித்திய வாழ்வை அடையும்படிக்கு நீர் அனுப்பின உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவுக்காக நன்றி இன்றும் என்றும் செலுத்துகின்றோம். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அறியாத ஆழங்கள்

ஒரு மனிதனானவன், வேலை அலுவலாக வெளி ஊருக்கு சென்று அங்கே பல மாதங்கள் தங்கியிருந்தான். அவன் வீடு திரும்ப வேண்டிய நாட்கள் வந்த போது, தேசத்தின் ஒரு பகுதியிலே ஏற்பட்ட, கலவரங் களால், வந்த வழியானது அடைபட்டு போய்விட்டது. அதனால், அவன் தன் ஊருக்கு திரும்புவதற்கு கப் பல் வழியாக அநேக நாட்கள் நீண்ட பயணம் செய்ய வேண்டிய தாயிற்று. ஆரம்பம் நல்ல அனுப வமாக இருந்தது. சில நாட்களு க்கு பின்னர் கப்பல் எங்கு நிற் கின்றது என்று தெரியாதபடிக்கு கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் தண்ணீராக இருந்தது. ஒரு இர விலே ஏற்பட்ட பலத்த காற்றி னாலே, கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. மழைமேகங்கள் சூழ்ந்து கொ ண்டது. அதைக் கண்ட, கடல் அனுபவமில்லாத அந்த மனிதனானவன் திகிலடைந்தான். எப்படியாக கப்பல் கரை சேரப்போகின்றது என்று பதற் றமடைந்து, குழப்பங்களை ஏற்படுத்தினான். அதைக் கண்ட கப்பலின் மாலுமி, அவனை அணுகி, நண்பனே, நீ இப்படியாக கலங்கத் தேவை யில்லை. இந்த புயல் மத்தியிலும் வழியை கண்டுபிடித்து கப்பலை ஓட்டிச் செல்லும் அனுபவம் எங்களுக்கு உண்டு. எனவே, கட லைப் போல நீயும் கொந்தளிக்காமல், அமைதலாக இரு. நீ போக வேண் டிய இடத்திற்கு உன்னை கொண்டே சேர்ப்போம் என்று அவனுக்கு அறி வுரை கூறி ஆறுதல் படுத்தினான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த பூவுலக வாழ்க்கையிலும் நாமும் அறியாத ஆழங்கள் போன்ற சூழ்நிலைகளால் சூழ்ந்து கொள்ளப்படலாம். அந்த வேளைகளிலே, நம்மை அழைத்த தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை சிலர் மறந்து போய்விடு கின்றார்கள். பயம் மனதை ஆட்கொள்வதால், அவர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார் என்பதை குறித்த சந்தேகம் மனதிலே ஆரம்பித்து விடுகின்றது. அந்த வேளையிலே, கலங்காமலும், திகையாமலும், உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவரு டைய பாதத்திலே அமர் திருக்க அவரே தேவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வழி வனாந்திரமாகவோ, கொந்தளிக்கும் சமுத்திரமாகவோ, ஆகாயமாகவோ எப்படியாகவோ இருந்தாலும், சேனைகளின் கர்த்தர் நம்மோடிக்கின்றார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் என்பதை அறிக்கை செய்து, அந்த அறிக்கையிலே உறுதியாக நிலைத் திருங்கள்.

**சங்கீதம் 46:10**

நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள் ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.

**ஜெபம்:** பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகின்ற தேவனே, அறியாத ஆழங்களிலே என் வாழக்கைப் படகு செல்லும் போது, உம்மை சார்ந்திருந்து உம்மில் பெலன் கொள்ள என்னை வழிநடத்தி செல்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# போதுமென்கின்ற மனம்

ஒரு கிராமத்திலே வசித்த வந்த விசுவாசியானவன், உழைப்பின் பிரயாசத்தினால் உண்டான பலனினாலே தன் தன் குடும்பத்தின் தேவைகளை சந்தித்து, சிக்கனமாக வாழ்ந்து வந்தான். அவனுடைய சிக்கனமாக வாழ்க்கைகை குறித்து சிலர் விமர்சித்து வந்தார்கள். ஒரு நாள் அந்த விசுவாசியானவனின் நண்பனானவன், அவனை நோக்கி: நீ ஏன் இப்படியாக வாழ்ந்து வருகி ன் றாய். நீ யாருக்காக சேர்த்து வைக்கின்றாய் என்று கேட்டான். அந்த விசுவாசியானவன் சிரித்தபடி தன் நண்பனை நோக்கி: நான் யாருக்கும், எதையும் சேர்த்து வைப்பதற்கு கையிலே எதுவும் மிஞ்சுவதில்லை. என் நாளாந்த பிரயாசத்திலே என் குடும்பத்தின் தேவைகளை மட்டும் சந்திப்பதற்றாக என் பெலத்திற்கேற்றபடி வாழ்ந்து வருகின்றேன் என்று கூறினான். பிரியமான சகோதர சகோதரிகளே, சில விவாசிகள் தங்கள் நிறைவிலே சேமித்து வைக்கின்றார்கள். சிலர் தங்கள் குறைவிலே முறுமுறுக்கின்றார்கள். ஆனால், கர்த்தரை நம்பி வாழ்பவன், எந்த சூழ்நிலையிலும் மனரம்யமாக இருக்க கற்றுக் கொள்கின்றான். அவன் எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்கு நன்றியறிதலுள்ளவனாக இருக்கின்றான். ஐசுவரியம் நிறைவாக வரும்போது என் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் இருக்கின்றவனுடைய பிரச்சனைகள் ஒரு போதும் தீர்ந்து போவதில்லை. ஏனெனில் அவனுடைய பிரச்சனையானது அவனுக்கு போதுமென்றின்ற மனம் இல்லை. எப்போதும் அதிகம் வேண்டும் என்கின்ற மனதையுடையவனாகவே வாழ்கின்றான். தேவ ஊழியராகிய பவுல், "நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." என்று தன் பெலனாகிய கிறிஸ்துவை குறித்து அறிக்கை செய்திருக்கின்றார். உங்களுடைய பெலன் எங்கே இருக்கின்றது? உலகத்திலே வாழும் நாட்களிலே, மனரம்யமானது எதிர்காலத்திலே ஏதோ ஒரு நாள் உண்டாகும் என்று காத்திருக்காமல், கர்த்தர்மேல் உங்கள் பாரத்தை இறக்கிவைத்து வையுங்கள். நாளையைக் குறித்து கவலையடையாமல், அவருக்குள் எந்த சூழ்நிலையிலும் மனமகிழ்சியாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

**பிலிப்பியர் 4:11**

**ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.**

**ஜெபம்**:அன்பின் தேவனே, உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கின்ற மனத்தை எனக்கு தந்து, விசுவாசத்திலே நிலைத்திருக்கும் வாழ்க்கை வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதை குறித்து மேன்மைபாராட்டுவீர்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இரண்டு நண்பர்கள் நீதியின் வழியிலே பிரயாசப்பட்டு கைநிறைய உழைத்து வந்தார்கள். ஒருவன் தாராளமாக தனக்கும் தன் குடும்தாருக்கும் நவீன தொழில்நுட்ப பொருட்களிலே செலவு செய்கின்றவனாக இருந்து வந்தான். அவன் தன் குடும்பத்தை தான் கவனித்து வருவதைக் குறித்து மேன்மைபாராட்டி வந்தான். மற்றவனோ, சிக்கனமான வாழ்க்கை வாழ்ந்துவந்தான். சிக்கனமாக வாழ்ந்து வந்தவன். தன்னுடைய சிக்கனமான வாழ்கையைக் குறித்து அவன் அவ்வப்போது மேன்மைபாராட்டிக்கொள்வான். செலவு செய்கின்றவனை நோக்கி: நீ ஏன் இப்படியாக அதிகமாக செலவு செய்து உன் பணத்தை அழிக்கின்றாய் என்று தன் நண்பனை கேட்டுக் கொண்டான். அதற்கு நண்பனானவன் சிக்கனமாக வாழ்க்கின்றவனை நோக்கி: நீ சிக்கனமாக செலவு செய்து, மிகுதியான பணத்தை என்ன செய்கின்றாய் என்று கேட்டான். அதற்கு சிக்கமான வாழ்க்கின்றவன் மறுமொழியாக: நான் என் பணத்தை சேமித்து, என் சந்ததி சுகீத்திருக்கும்படி, அவர்களுக்கு வீடுகளையும் காணிகளையும் சேர்த்து வைக்கின்றேன் என்று கூறினான். அவன் நண்பனானவன் அவனை நோக்கி: நான் இப்போது அதிகமாக செலவு செய்து அழிக்கி ன்றேன். நீ எதிர்காலத்தின் அழிவுக்காக சேர்த்து வைக்கின்றாய் என்று கூறினான். பிரியமானவர்களே, தேவனை அறியாத அவர்கள் அப்படியாக தங்கள் கருத்துக்களை கூறிக் கொண்டார்கள். ஆனால், தேவனாகிய கர்த்தரை அறிந்து, "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்." என்று கூறுபவர்களின் இரு விசுவா சிகள் இப்பயடியாக பேசிக் கொண்டால், இவர்களின் எவரை நீங்கள் மேன்மைப்படுத்துவீர்கள்?பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் எவனை மேன்படுத்தும்? ஒருவன் தன் தேவைக்கு மேலதிகமாக இருப்பதை, தற் போதைய குடும்பத்தின் சுகபோக வாழ்விற்காக தன்னுடைய நீதியாய பிரயாசத்தை செலவு செய்கின்றான். மற்றவன் தன் எதிர்கால சந்ததியின் சுகபோக வாழ்விற்காக சேர்த்து வைக்கின்றான். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடு கிறதும் இல்லை என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்திலிருந்து இருவரின் இருதயமும் இந்த பூமிக்குரியதாகவே இருந்தது. உங்கள் இருதயமோ பரலோகத்திற்குரிய வைகளை நாடித் தேடுவதாக.

**மத்தேயு 6:21**

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.**

**ஜெபம்:** என் ஆத்துமா பாதாளத்தில் அழிந்து போகாமல் காத்த தேவனே, நான்இந்தப் பூமிக்குரியவைகளை நாடித் தேடாமல், பரலோக ராஜ்யத்திற்குரியவைகளை நாடித் தேட பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உத்தமர்களின் சுதந்திரம்

**சங்கீதம் 37:18**

**உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்.**

ஒரு குடும்பதினர், சில தவிர்க முடியாத காரணங்களால், தங்கள் சொந்த ஊரைவிட்டு, வேறு ஊருக்கு இடம்பெயர்ந்து அங்கே வாழ்ந்து வந்தார்கள். புதிதாக வந்த ஊரிலே, அவர்களுக்கு பெரிய உத்தியோகங்கள் கிடைக்கவில்லை. அதனால், தங்கள் செய்யக் கூடிய வேலைகளை செய்து, அதனால் உண்டாகும் வருவாயிலே கையும் கணக்குமாக வாழ்ந்து வந்தார்கள். தங்களுக்கு உண்டாயிருந்த கொஞ்சத்திலும், ஒரு சிறு பகுதியை ஏழை எளியவர்களுக்கு உதவும்படி பிரித்து வைத்தார்கள். ஏனெனில் அவர்கள் நம்பிக்கை தங்கள் உழைப்பிலல்ல, வானத்தையும் பூமியையும் உண்டாக்கி தேவனாகிய கர்த்திடத்திலே இருந்தது. அதனால், அவர்கள் தங்கள் தற்போதையே சூழ்நிலையைக் குறித்தோ, தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்தோ கவலையடையவில்லை. இந்த உலகிலே தேவனை அறியாத பெரும் ஐசுவரியமுள்ளவர்கள் இருக்கின் றார்கள். அவர்களோடே கூட, சில விசுவாச மார்க்கத்தார், கர்த்தர் தங்களை ஆசீர்வதித்திருக்கின்றார் என்று தங்கள் உலக ஐசுவரியத்தை குறித்து மேன்மை பாராட்டி, ஏழைகளாக இருக்கும் விசுவாசிகளைப் பார்த்து, நீங்கள் இப்படி வாழத் தேவையில்லை என்று வெறும் வார்த்தைகளை கூறுகின்றார்கள். பொருளாதார நெருக்கடிகளிலே வாழும் விசுவாசக் குடும்பங்களை கவீனப்படுத்துகின்றார்கள். "என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?" என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஒருவன் தனக்காக சேர்த்து வைத்துக் கொண்டு, அதிலே மேன்மை பாராட்டுவானாக இருந்தால் அதனால் அவன் ஆத்துவாவிற்கு பலன் என்ன? கர்த்தருக்கு பயந்து, உத்தம வழியிலே நடக்கின்றவர்களின் நாடகளை கர்த்தர் அறிந்திருக்கின்றார். அவர்கள் சுதந்திரம் என்றென்றைக்கும் இருக்கும். அவர்கள் உலகப் பொருட்களுக்கு ஊழியம் செய்யாமல், தேவனாகிய கர்த்தருக்கு ஊழியம் செய்வதால், தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்த மேன்மைபாராட்டுதலே அவர்கள் வாயிலிருக்கும். அவர்கள் தங்கள் குறைவிலும் நிறைவிலும் ஏழைகளுக்கு இரங்குகின்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக இருக்கின்றார்கள்.

**ஜெபம்**: என் வாழ்வின் வழிகாட்டியாகிய தேவனே, என் உயர்விலும், தாழ்விலும் நீர் என்னோடு இருப்பதை மறந்து போய்விடாமல், உமக்கு பயந்து நீர் போதித்த வழியிலே வாழ எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இறுதிவரை நம்மை நடத்துவார்

ஒரு குடியானவன், நல்ல எதிர்காலத்தை கருதி, தான் பிறந்த ஊரை விட்டு, தூர தேசத்திலுள்ள ஊரொன்றுக்கு, தன் குடும்பத்தாரோடு, குதிரை வண்டியிலே பயணம் செய்து கொண்டிருந்தான். ஒரு இரவிலே, அவன் வண்டிலை நிறுத்தி, அங்கே தற்காலிகமான கூடாரத்தை போட்டு அங்கே தங்கியிருந்தான். நித்திரைக்கு போகும் முன்னதாக, படுக்கையிலே இருந்து, தான் கடந்து வந்த பாதையை சற்று திரும்பி பார்த்தான். பல நாட்களாய் பயணம் செய்து கொண்டிருக்கும் அவனுடைய பாதையிலே, வெப்பம், மழை, குளிர் போன்ற சாத்திய மற்ற காலநிலைகள் ஏற்பட்டிருந்தது. அது மட்டுமல்லாமல், பெலவீனங்கள், ஆபத்துக்கள், நெருக்கடிகள், பற்பல சவால்கள் எதிர்த்து வந்தது. தாபரிக்கும் ஊருக்கு சென்றடைய இன்னும் பல நாட்கள் இருந்த போதிலும், தான் கடந்து வந்த பாதையிலே தன்னோடிருந்து, தன் பயணத்தை வாய்க்கச் செய்யும் தேவனாகிய கர்த்தருக்கு நன்றி செலுத்தினான். பிரியமான சகோதர சகோதரிகளே, இன்னுமொரு ஆண்டை இந்த உலகிலே கடந்து கொண்டிருக்கின்றோம். தேவனாகிய கர்த்தர் தாமே எப்படியாக எங்களை நடத்தி வந்தார் என்கின்ற பற்பல சாட்சிகள் ஒவ்வொருவருக்கும் உண்டு. இன்பமான, நிகழ்வுகள் உண்டு. சில கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்பட்ட நாட்கள் உண்டு. நீதியின் பாதையிலே ஜீவனம் பண்ணும் போது, நஷ்டங்களை சகித்து கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டதுண்டு. சோதனைகள், வேதனைகளின் பாதையிலே நடந்த நாட்கள் உண்டு. வெற்றியை கொண்டாடிய நாட்கள் உண்டு. அவற்றில் சில தங்களால் தங்களுக்கு வருவித்துக் கொண்டவைகள். வேறு சில மற்றவர்களால் ஏற்படுத்தப்பட்டவைகளாக இருக்கலாம். இன்னும் சில, ஏன் அப்படியாக நடைபெறுகின்றது என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால், இவை யாவற்றின் மத்தியிலும், சிலு கேள்விகள் எங்கள் மனதில் அவ்வப்போது எழுந்தாலும், நாம் தேவனிடத்தில் கொண்ட விசுவாசத்தை விட்டு தளர்ந்து போகாதபடிக்கு, அவருடைய கிருபை நம் ஒவ்வொருவரையும் பெலப்படுத்தி, தாங்கி வழிநடத்தி வருகின்றது. தாயின் கருவிலே உங்களை ஏந்தி வந்த தேவன், உங்கள் முதிர்வயதுவரைக்கும் அப்படிச் செயவார். நரைவயதுமட்டும் அவர் உங்களைத் தாங்குவார். தீமைகளை நன்மைகளாக மாற்றும் வாழ்வின் வழிகாட்டியாகிய கர்த்தரைப் போற்றுப் பாடுவோம். அவர் நடத்தி வந்த ஆச்சரியமான வழிகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

**ஏசாயா 46:4**

**இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்.**

**ஜெபம்:** தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் என்னை ஏந்தி வந்த தேவனே, இந்நாள் வரைக்கும் நீர் என் வாழ்வில் செய்து வந்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி. தொடர்ந்தும்மாய் என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வெட்கப்பட்டுப் போவதில்லை

"பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப்பொருளைப் பறிக்கக்கூடுமோ? அல்லது நீதியாய்ச் சிறைப்பட்டுப்போனவர்களை விடுவிக்ககூடுமோ?" உங்களை சிறைப்பித்தவர்கள் எவ்வளவு பலமும் அதிகாரமுடையவர்களாக இருக்கலாம். மனித பெலத்தினால், அவர்களை ஒருவரும் விடுக்க கூடாது. சில சமயங்களிலே, நீங்கள் நீதியின்படி, செய்த குற்றங்களுக்காக தண்டனையை அனுபவிக்கலாம். ஆனால் கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. "என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள் பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும் உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன்." என்று தேவனாகிய கர்த்தர்தாமே தம்முடைய ஜனங்களுக்கு கூறியிருக்கின்றார். எனவே இன்னுமொரு வருடமானது இந்தப் பூமியிலே முடிவு வருகின்ற வேளையிலே, கர்த்தருக்குள் திடன் கொள்ளுங்கள். உங்கள் சுய பெலத்தின்மேல் சார்ந்து மனம் தொய்ந்து போகாதபடிக்கு, தேவ பெலன் உங்கள் ஊடாக கிரியை செய்ய இடங் கொடுங்கள். இக்கட்டும் நெருக்கமும் சூழ்ந்து கொள்ளும் போதும், இது வாழ்வு முடியும் நேரம் என்று எண்ணும் போது, ஆண்டவர் இயேசுவோடுகூட சிலுவையில் அடையப்பட்ட நல்ல கள்வன் என்று பெயர் பெற்ற மனிதனைப் போல, கர்த்தரின் இரக்கத்தை பெற்றுக் கொள்ளும்படிக்கு, அவரிடத்தில் உங்களை ஒப்புக் கொடுங்கள். பூவுலக வாழ்வு எப்படியும் ஒருநாள் முடிவுக்கு வரும். ஆனால், கர்த்தரை நம்பியிருக்கின்றவர்களுக்கு, அது அக்கரையிலே, நித்திய பேரின்ப வாழ்வின் ஆரம்பமாக இருக்கும். அவரை நம்பியிருக்கின்றவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. சமகாலத்திலே சில காரியங்கள் தோல்விகளைப் போல தோன்றலாம். ஆனால், கர்த்தரை நம்பி, அவருக்கா காத்திருக்கின்றவர்கள், நித்தியமான வெற்றியை பெற்று நீடூழியாய் வாழ்வார்கள். "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது. எனவே, இந்த நாளிலே, தொலைந்து போனதைபற்றி கவலையடைந்து ஒடுங்கிப் போகாமல், உங்களிடம் மிகுதியாய் இருப்பவைகளை கர்த்தரிடம் ஒப்புங் கொடுங்கள்.

**ஏசாயா 49:23**

**நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்;**

**ஜெபம்:** என்னை உம்முடைய உள்ளங்கையிலே வரைந்திருக்கின்ற தேவனே, உம்முடைய இரகத்திற்காக நன்றி. நான் சோர்ந்து போகாமல் உம்மைப் பற்றிக் கொண்டு தொடர்ந்து முன்னேற நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.